கண் வைத்திய நிபுணர்கள்
பெரிசு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M.
FERNANDO
580, HOSPITAL ROAD
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 24 ஞாயிற்றுக்கிழமை (08 - 01 — 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 43

# இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வுகாண
# அரசமைப்பை மாற்றவும் நாம் தயார்!

## ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 8

அதிகாரப் பரவலாக்கல் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். உகந்த தீர்வைக் காண்பதற்காகத் தேவைப்பட்டால் ஸ்ரீலங்காவின் அரசமைப்பை மாற்றியமைப்பதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.

— இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்பட்டுள்ள போர்இடைநிறுத்த உடன்பாடு குறித்து நேற்று முன்தினம் இரவு செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த போதே அவர் இவ்வாறு திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்கா— செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஓர் அடிப்படையாக வைத்துக் கொண்டு அதிகாரப் பரவலாக்கத்தை ஆராயலாம் என்

(6ஆம் பக்கம் பார்க்க)

## போர் இடைநிறுத்த உடன்பாடு:
## உடன் கருத்து வெளியிட ஐ.தே.க. பின்னடிப்பு!

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர் இடைநிறுத்த உடன்பாடு குறித்து உடனடியாகக் கருத்து வெளியிட முடியாது என்று ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்தார்.

அமுலுக்கு வரும் போர் இடைநிறுத்தத்தை நன்கு அவதானித்த பின்னரே அது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு அறிக்கை மூலம் வெளியிடப்படும் என்றும் அவர் இலங்கை வானொலிக்குத் தெரிவித்தார். (உ-ஐ)

## சந்திரிகா வெளியிட்ட
## கொள்கைப் பிரகடன உரை:
## கண்டிக்கிறார் விக்ரர் ஐவன்

கொழும்பு, ஜன. 8

பல ஆண்டுகளின் பின்னர் ஆகக்குறைந்தது அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய பொதுத் தேசியக் கொள்கைத் திட்டத்தை ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் சமர்ப்பிப்பார் என நாம் ஆவலுடன் எதிர்பார்த்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அத்தகைய நிழல் கூட அவரின் கொள்கை விளக்க உரையில் தென்படவில்லை.

— இவ்வாறு விசனம் தெரிவித்திருக்கிறார் 'ராவய'பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன்.

உலக வங்கி பணிப்பதைச் செய்யும் பலவீனமான நிலையிலேயே புதிய அரசு இருப்பதாகத் தோன்றுகின்றது.

இந்த நாட்டு விவசாய, தொழிலாளர் பெருமக்களை விட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பது தவறாகும்.

ஊழலுக்கு எதிரான — புனிதமான — திறந்த கொள்கையுடைய — அரசை அமைப்பதாக வாக்குறுதியளித்து

[6ஆம் பக்கம் பார்க்க]

## சமாதானக்குழுக்களில் செஞ்சிலுவை பங்குபற்ற முடியாது என அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

மோதல் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தாம் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு சிறிலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் அறிவித்துள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பில் வெளியிட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி நேற்று இந்த அறிக்கையை யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளுக்கு வெளியிட்டார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மோதல் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் 'சமாதானக் குழுக்களில் ஒன்றுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தலைமை வகிக்கவேண்டும் என விடுதலைப் புலிகள் மற்றும் அரசு ஆகிய இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் இதனை ஏற்கமுடியாதிருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிவித்துள்ளது.

மோதல் நிறுத்தத்தையோ அல்லது யுத்த நிறுத்தத்தையோ கண்காணிப்பதற்கு இராணுவ நிபுணத்துவம் அவசியமாகின்றது.

ஒரு சிவிலியன் தொண்டர் ஸ்தாபனம் என்ற முறையிலும்—

சர்வதேச மனிதாபிமான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை மையமாகக் கொண்ட கடப்பாடுடைய ஸ்தாபனம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## போர் இடை நிறுத்தம்: எழுத்து மூலம் அறிவிப்பு

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையிலான போர் இடைநிறுத்தம் நேற்று நள்ளிரவு (இன்று அதிகாலை) அமுலுக்கு வந்தது.

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்ததும் விடுதலைப் புலிகளும், அரச படையினரும் சகல தாக்குதல் நடவடிக்கைகளையும் நிறுத்திவிடுவர் என அறிவிக்கப்பட்டது.

போர் இடைநிறுத்தம் தொடர்பான எழுத்து மூல அறிவிப்பை விடுதலைப் புலிகளும், அரசும் நேற்று நள்ளிரவில் விடுக்க இருந்தனர்.

இரு தரப்பினராலும் வெளியிடப்படும் எழுத்து மூல பிரதிகள் இரு தரப்பினரிடையேயும் பரிமாறப்படும்.

## தங்கக் கடத்தல் முறியடிப்பு!

டுபாயில் இருந்து கொண்டு வரப்பட்ட 55 லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலிகள் மற்றும் தங்கப் பாளங்களை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் அவற்றை விமான நிலைய மலசல கூடத்தினுள் வைத்து கோடீஸ்வரர் ஒருவருக்கு கைமாற்றியபோது விமான நிலைய இரகசியப் பொலீஸார் அவர்கள் இருவரையும் கைது செய்தனர். (ஐ-6)

## நோர்வே நெதர்லாந்து பிரதிநிதிகள்இன்றுவருகை

யாழ்ப்பாணம், ஜன. 8

போர் இடைநிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுக்களுக்கு தலைமை வகிப்பதற்காக நோர்வே, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இன்று கொழும்பு வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

கண்காணிப்புக் குழுக்களுக்குத் தலைமை தாங்க பிரதிநிதிகளை அனுப்புமாறு அரசு விடுத்த வேண்டுகோளை கனடாவும் ஏற்றுள்ளதாக செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

கண்காணிப்புக் குழுக்களில் இடம்பெறும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஏற்கனவேஇங்கு வந்துள்ளனர் என்றும்—

இராணுவ அதிகாரிகளுடன் இன்று அல்லது நாளை அவர்கள் உரிய இடங்களுக்குச் செல்வர் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன. (உ-ஐ)

## காரைநகரில் வெள்ளியிரவு மீனவரை நோக்கித் தாக்கு

கொழும்பு, ஜன. 8

போர் இடைநிறுத்த இணக்கம் நேற்று நள்ளிரவு அமுலுக்கு வருவதற்கு முன்னர்—

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு காரைநகர் இராணுவ முகாமில் இருந்து பொன்னாலைக்கடற் பிராந்தியத்தை நோக்கி ஷெல் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

பொன்னாலை ஊரிக்கடல், விறாட்டிமுனைப் பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கியே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தினால் பீதியுற்ற மீனவர் தொழிலை இடைநிறுத்திக் கரைப்பகுதிக்கு மீண்டனர். (உ-15)

## கண்காணிப்புக் குழுவுக்கு
## ஆசிய நாட்டவரை அழைக்க புலிகள் விரும்பவில்லை!

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போர் இடை நிறுத்தத்தை கண்காணிக்கும் குழுக்களில் ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் எவரும் இடம்பெறுவதை விடுதலைப் புலிகள் விரும்பவில்லையாம்.

இத்தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டதாக இந்தியவானொலி அறிவித்தது.

கண்காணிப்புக் குழுக்களுக்கு தலைமை வகிப்பதற்கு நோர்வே, நெதர்லாந்து, கனடா நாட்டுப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-3)

## அரசு புலிகள் உடன்பாட்டுக்கு தென்னிலங்கையில் பெரும்வரவேற்பு

கொழும்பு, ஜன. 8

அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே போர் இடைநிறுத்த உடன்பாடு ஏற்பட்டிருப்பதை தெற்கில் உள்ள பல மதத் தலைவர்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பலரும் வரவேற்றுள்ளனர்.

அமரபுர மகாநாயக்கர் வண. மடிகே பஞ்ஞாசிக தேரர் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான உடன்பாட்டை வரவேற்றுள்ளார்.

ஐக்கிய இலங்கை என்ற வரம்பிற்குள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இந்தப் புதிய முயர்சி ஒரு முக்கிய கட்டமாக அமையுமானால் அதையிட்டு மகிழ்ச்சியடைவதாக இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்ற பொதுச் செயலாளர் அதி வண. ஒஸ்வோல்ட் கோமிஸ் தெரிவித்துள்ளார்.

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வருவதை தமிழர் விடுதலைக் கூட்டணி வரவேற்கிறது என்று அதன் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

போர் இடைநிறுத்தம் தொடர்ந்து போர் நிறுத்தத்துக்கு வழிவகுக்கும் என்றும் தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

யுத்தத்தை ஒருநாள் நிறுத்திவைத்தாலும்கூட அது

(6ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த பீடத்திடம்
## பாப்பரசர் சார்பில் வருத்தம் வத்திக்கான் தெரிவிப்பு

'பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் எழுதிய ''நம்பிக்கையின் வாசலைத் தாண்டுதல்'' என்ற நூலில்—

பௌத்த மதத்தை நிந்திக்கும் விதத்தில் வாசகம் ஒன்று இடம்பெற்றது குறித்து—

வத்திக்கான் வருத்தம் தெரிவித்துள்ளது.

வத்திக்கான் முதலாவது செயலாளர் கர்தினால் செபாலோ இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

பரந்த கருத்தடிப்படையில் இடம்பெற்ற அந்த வாசகம், பௌத்த மதத் தலைவர்களுக்கு மனவேதனை உண்டு பண்ணியது குறித்து பாப்பரசர் கவலை அடைந்துள்ளார்—

பௌத்த மதத்தின்பால் மரியாதை தயான நிலைப்பாட்டையே பாப்பரசர் கொண்டுள்ளார் —

பௌத்த மதத் தலைவர்களுக்கு ஏற்பட்ட வேதனையைப் போக்குவதற்கு ஸ்ரீலங்கா ஆயர்கள் சம்மேளனம் எடுத்த நடவடிக்கைகளுக்கும் பாப்பரசர் நன்றி தெரிவித்துள்ளார். — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ)

## யாழ். ஆஸ்பத்திரியில்
## வெளி நோயாளர் சிகிச்சை தினமும் காலை7மணிமுதல்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை தொடக்கம் வெளிநோயாளர்களுக்கான சிகிச்சையை டாக்டர்கள் காலை 7 மணி முதல் ஆரம்பிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வெளி நோயாளர்களுக்கானசிகிச்சை காலை 8மணி தொடக்கம் நடத்தப்பட்டு வந்தது.

தற்போது வெளிநோயாளர் பிரிவில் நாளாந்தம் சுமார் ஆயிரம் நோயாளிகள் வரை சிகிச்சை பெற வருவதால் சிகிச்சைக்காக அவர்கள் நீண்டநேரம் வரை காத்திருக்க வேண்டி ஏற்படுகிறது.

காலையில் வருகின்ற சில நோயாளர்கள் மாலை வரை காத்து நிற்கும் நிலையும் ஏற்படுவதுண்டு.

எனவே நோயாளர்களின் நலனை முன்னிட்டு வெளி நோயாளர் சிகிச்சைக்கான நேரத்தை ஒரு மணிநேரம் முன்னராக ஆரம்பிப்பதென யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

கொழும்பிலிருந்து வந்த

[6ஆம் பக்கம் பார்க்க]

## தளபதிகளின் இணக்கத்துடனேயே பூநகரி முகாம் நகர்த்தப்படுகின்றது
### அமைச்சர் அனுருத்த தகவல்

கொழும்பு, ஜன. 8

குடாநாட்டுக்கான போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பதற்கு வசதியாக பூநகரி முகாமை 500 மீற்றர் தூரத்துக்கு பின்னோக்கி நகர்த்துவது என்ற முடிவு முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை செய்யப்பட்ட பின்னரே எடுக்கப்பட்டது.

அது குறித்துப் படையினர் பதற்றமடையவோ, பீதியடையவோ அவசியமில்லை.

— இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

போர் இடைநிறுத்தம் குறித்து பி. பி. ஸி சிங்கள சேவைக்குக் கருத்துத் தெரிவித்த அவர் —

விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட போர் இடை நிறுத்த உடன்படிக்கை இரு தரப்பினரிடையேயும் இதுவரை காலமும் இருந்திராத பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது இந்த நம்பிக்கை தொடர்ந்து வலுப்பெறும் என்றார். (ஐ-9)

### மாவுடன்ஹறரண இன்று வரும்!

யாழ்ப்பாணம், ஜன. 8

திருகோணமலையில் இருந்து 2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் 'ஹரண' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டில் ஏறபட்டுள்ள மா தட்டுப்பாட்டை அடுத்தே மா எடுத்து வரப்படுகிறது.

## அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட
## 4000க்கு மேற்பட்ட ஆயுதங்கள் இன்னும் மீட்கப்படாத நிலையில்

கொழும்பு, ஜன. 8

கடந்த ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில்— 1987 இன் ஆரம்பத்தில்— பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்களுக்கு வழங்கப்பட்ட சுமார் ஆறாயிரம் ஆயுதங்களில் இதுவரை சுமார் ஆயிரத்து 300 ஆயுதங்களே திருப்பிப் பெறப்பட்டிருக்கின்றன.

அரசியல் வாதிகளினதும் அவர்களது உதவியாளர்களினதும் கைகளில் சிக்கியுள்ள சுமார் 4 ஆயிரத்து 700 ஆயுதங்கள் இன்னும் மீட்கப்படாமல் உள்ளன.

தெற்கில் ஜே.வி.பியினரின் அச்சுறுத்தல் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில்—

சுமார் 1,700 இற்கு மேற்பட்ட 38 ரக றிவோல்வர்கள், 1,700 இற்கு கூடுதலான ''றிப்பிட்டர் துப்பாக்கிகள்'' சுமார் 2,400 துப்பாக்கிகள் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப உவையள் வர [illegible] யைச் சேர்க்கவையள் [illegible]

## தப்பி ஓடுவதற்கு முன்னேற்பாடாக
## தவறான முகவரியைக் கொடுத்து படைகளில் சேரும் சிப்பாய்கள்!

கொழும்பு, ஜன 8

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் படையில் சேரும் போதே தவறான முகவரிகளைக் கொடுத்திருப்பது தெரிய வந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட தப்பியோடிய சிப்பாய்களை தேடிக் கண்டுபிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது இந்த விவரம் தெரியவந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையில் இருந்து இதுவரை தப்பியோடிய சிப்பாய்களில் சுமார் 8 ஆயிரம் பேர் இவ்வாறு பொய்யான முகவரிகளை சமர்ப்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த பின் அழிந்து போகும் கண்களை தானம் செய்வது மனிதனுக்கு மாண்பு தரும்

கண்தானம் என்பது மனிதனுடைய அடிப்படையான மிகவும் முன்னேற்றமான நாகரிகப் பண்புகளில் ஒன்றாகவே கருதப்படல் வேண்டும். ஏனெனில் எமது உடலிலுள்ள மிகவும் முக்கியமான உறுப்புக்களில் கண்கள் முதன்மையானவை.

கண்பார்வை பிறக்கின்ற பொழுதே இல்லாதவர்கள் அல்லது இடையினில் இழந்தவர்கள் மிகவும் துர்ப்பாக்கியசாலிகளாகவே கருதப்படுவார்கள். ஏனெனில் கண்பார்வையின்றி நாம் எதனையுமே இந்த உலகத்தில் பார்க்கமுடியாது.

நாம் ஒவ்வொருவரும் என்றோ ஒரு நாள் ஒருவிதத்தில் இறக்கத்தான் போகின்றோம். இறந்தவுடன் நெருப்பினில் எரிந்து சாம்பலாகிப் போகின்ற கண்களை, மண்ணோடு மண்ணாகப் போகின்ற கண்களை நாம் இறந்த பின்னர் இன்னொருவருக்கு தானமாக வழங்குவதன் மூலம் ஏற்கனவே இருளில் மூழ்கி, வாழ்வை இழந்திருக்கும் ஒருவருக்கு இழந்த பார்வையை மீண்டும் பெறச் செய்யலாம். கண்பார்வையை ஏதோ ஒரு காரணத்தினால் இழந்திருக்கும் எத்தனையோ பேரின் வாழ்வு எமது கைகளில்தான் தங்கியிருக்கின்றது.

எனவே நாம் ஒவ்வொருவரும் உயிருடன் இருக்கும் போது அல்லது - இறந்த பின்னர் வீணாகப் போகின்ற எமது கண்களை தானம் செய்வோம் என உறுதி செய்து கொள்ளுவோம். இதன் மூலம் கண்பார்வை இழந்துள்ள எத்தனையோ பேருக்கு மீண்டும் ஒளி கிடைக்கும்.

### கண் தானம் செய்வதற்குரிய முறைகள்

★ பத்து வயதிற்கு மேலுள்ள ஒவ்வொருவரும் தாம் இறந்த பின்னர் தமது கண்களைத் தானம் செய்யலாம்.

★ இறந்த பின்னர் எனது கண்களை இன்னொருவருக்குத் தானமாக வழங்க சம்மதிக்கின்றேன் என்பதனை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இதனை உயிருடன் இருக்கின்ற பொழுதே உறவினர்களிடம் எழுத்து மூலம் தெரிவித்துக் கொள்ளலாம்.

★ வயது வந்தவர்கள் தாமே தமது கண்களை தானமாகச் செய்வதற்கு சம்மதம் தெரிவிக்கலாம்.

★ அல்லது மிகவும் நெருங்கிய உறவினர்கள் திருமணமானவர்களாயின் கணவன் அல்லது மனைவி சம்மதம் தெரிவிக்கலாம்.

★ தாய் அல்லது தகப்பன் இறக்கின்ற பொழுது பிள்ளைகள் அனுமதி வழங்கலாம்.

★ பிள்ளைகள் இறக்கின்ற பொழுது தாய் அல்லது தகப்பன் அல்லது பாதுகாவலர்கள் அல்லது பொறுப்பான உறவினர்கள் சம்மதம் தெரிவிக்கலாம்.

★ ஒருவர் இறந்த முதல் ஆறு மணித்தியாலங்களுக்குள் சத்திர சிகிச்சை மூலம் கண்கள் அகற்றப்படல் வேண்டும்.

★ இறந்த உடலிலிருந்து கண்களை சிகிச்சை (Dissection) மூலம் எடுக்கின்ற பொழுது ஒரு துளி இரத்தம் கூட சிந்தாது.

★ கண்களை அகற்றிய பின்னரும் கண்களிலிருந்து இரத்தக்கசிவு ஏற்படாது.

★ கண்கள் குழியாக இருக்காது ஏனெனில் கண்களில் செயற்கையான கண்கள் பொருத்தப்படும் கண்ணின் இமைகள் மெல்லிய இழையினால் ஒன்றோடு ஒன்று தைக்கப்படும். எனவே இறந்தவர் இயற்கையாக ஆழ்ந்த நித்திரையில் தூங்குவது போன்றிருக்கும்.

★ இறந்தவர்களிடமிருந்து தானமாகப் பெறப்பட்ட கண்கள் உடனடியாகவே கண்பார்வை இழந்த ஒருவருக்குப் பொருத்தப்படும்.

★ தானமாகப் பெறப்பட்ட கண்கள் குளிர்சாதனப் பெட்டியில் (Refrigirator) ஏறக்குறைய 4 C பாகை சென்ரிகிரேட் வெப்ப நிலையில் 48 மணித்தியாலங்கள் வரை பாதுகாக்கப்படலாம்.

★ இறந்தவரின் உடலிலிருந்து கண்களை சிகிச்சை மூலம் பெற்றுக் கொள்வதற்கென விசேடமான (Enucleation Set) கருவிகளைக் கொண்ட பெட்டி இருக்கின்றது. கண்விழிகளைப் பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கென குளிர்க்காட்டிகள் (Ice Cubes) கொண்ட அமைப்பு இருக்கின்றது.

★ ஒருவர் இறக்கின்ற பொழுது அவர் தன்னுடைய கண்களைத் தானமாக வழங்கச் சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் உறவினர்கள், சம்பந்தப்பட்டவர்கள் நேரத்தை வீணாக்காது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலுள்ள கண்சிகிச்சை வார்ட்டில் (Eye Ward) அல்லது யாழ்ப்பாணக் கண்கிளினிக்கில் (Eye Clinic) உள்ளவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

★ இங்கிருந்து இது சம்பந்தமான மருத்துவ அதிகாரி உடனடியாக வந்து இறந்தவரிடமிருந்து கண்களைப் பெற்றுக் கொள்ளுவார்.

உடலில் ஏற்கனவே உள்ள நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், ஆஸ்மா வியாதி, இருதய வியாதி. விபத்து மரணம் போன்ற வியாதிகள் அல்லது பிரச்சினைகள் கண் தானமாகச் செய்வதற்கு தடையானவை அல்ல.

ஆனாலும்: நஞ்சருந்தி மரணமடைந்தவர்கள், வைரசுக்களினால் செங்கண்மாரி நோய் ஏற்பட்டு இறந்தவர்கள் புற்றுநோயினால் இறந்தவர்கள், பத்து வயதிற்கு குறைந்த பிள்ளைகள் ஆகியோரிடமிருந்து கண்தானமாகப் பெறப்படுவதில்லை.

### கண்மாற்று சிகிச்சை செய்யப்பட வேண்டியவர்கள்

பிறக்கின்ற பொழுதே கண்களில் சில குழந்தைகள் பிறப்புக் குறைபாடுகளுடன் பிறக்கின்றார்கள் உதாரணமாக கெரட்டோ கோணஸ். கெரட்டோ பல்பஸ், கருப்பையில் வைரசுக் கிருமிகள் பாதித்திருத்தல்.

இவர்களுக்கு கண்மாற்றுச் சிகிச்சை செய்வதன் மூலம் கண்பார்வை பெறச் செய்யலாம். ★

வைத்திய கலாநிதி
**பி. ரமணீகரன்**

---


## வாழ்த்துகிறோம்

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின்
70ஆவது பிறந்த தினத்தை யொட்டி
பலரும் பயனுறப்
பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்



**குணம் குளிர்களி அகம்**
49 காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.
[சி-5765]



சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின்
**70 ஆவது பிறந்ததின வாழ்த்து**

தமிழ் சைவம் தழைத்தோங்கத் தொண்டுசெய்தோய்
அமிழ் தினிலுமினிதாய பாக்கள் செய்தோய்
அருள் பொழிந்தே அல்லலுற்றோர்க் கருளும் செய்தோய்
ஏழுபத் தாண்டுகள் நிறைவுகண்டோய் நீடுவாழி.

காமாட்சியம்பாள் இந்து பரிபாலனசபை
காமாட்சியம்பாள் தேவஸ்தானம்
நீர்வேலி.
07—01—1995
(34599)



## பணிநிலை வெற்றிடம்

**சுருக்கெழுத்து / தட்டெழுத்தாளர்**
(தமிழ்)

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் கீழ் இயங்கும் தமிழீழ நீதிமன்றுகளுக்கு, மேற்படி பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

✶ கல்வித்தகைமை:- க. பொ. த. (சா. த.)
✶ வேகம்: சுருக்கெழுத்து நிமிடம் 50 — 60 சொற்கள்.
தட்டெழுத்து நிமிடம் 20 — 25 சொற்கள்.

விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 20—01—1995 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பொறுப்பாளர்,
நடுவப்பணியகம்,
தமிழீழ நீதி நிர்வாகத்துறை,
கோண்டாவில்.
[செ/127]


---

# யாழ்ப்பாண டாக்டர் ஒருவருக்கு பிரிட்டனில் கிடைத்த கௌரவம்

1991ஆம் ஆண்டு லண்டனில் புல் ரெறியர் நாயால் மிகவும் மோசமாகக் கடிக்கப்பட்டு கண்டபடி காயப்பட்டிருந்த ரக்சனா கான் என்ற 6 வயதுச் சிறுமிக்கு சிகிச்சை அளித்து அவரின் உயிரைக் காப்பாற்றிய டாக்டர் சபாரத்தினம் சபாநாதன் இங்கிலாந்து றோயல் சத்திர சிகிச்சை வைத்தியர் கல்லூரியின் கௌரவப் பேராசிரியராக நியமனம் பெறும் புகழைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட— தற்பொழுது 45 வயதாகும்—டாக்டர் சபாநாதன் லண்டனில் உள்ள பிராட்போட் றோயல் ஆஸ்பத்திரியில் இருதய மார்பு சத்திர சிகிச்சை ஆலோசக நிபுணராகப் பணி புரிகின்றார்.

டாக்டர் சபாநாதன் நோவைக் கையாளுதலில் புதிய நுட்பங்களை அறிமுகம் செய்தவரும் சுவாசப்பை புற்று நோய்ச் சிகிச்சையில் விசேட முறைகளைப் புகுத்திய முன்னோடியும் ஆவார்.

அவர் நூற்றுக்கு மேலான மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். நோவைக் கையாளுவதிலான தமது ஆராய்ச்சிகள் பற்றி உலகின் பல நாடுகளில் விரிவுரைகளை நிகழ்த்தியுள்ளார்.

டாக்டர் சபாநாதன் 1992ஆம் ஆண்டில் அவ்வாண்டுக்கான சிறந்த டாக்டர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டார். இவர் 1990 இல் யோர்க்ஷயரில் முதலாவது தனிச் சுவாசப்பை மாற்றுச் சிகிச்சையைச் செய்தார்.

மேலும், டாக்டர் சபாநாதன் ''உயிர் வாழ்வுக்காக சுவாசப்பைகள்'' என்ற இயக்கத்தின் ஸ்தாபகராக அமைந்து ஒரு லட்சம் ஸ்ரேர்லிங் பவுண்ட்டுக்கு (சுமார் 70 லட்சம் ரூபா) மேலான பணத்தை சுவாசப்பை நோயாளிகளுக்காகச் சேகரித்துள்ளார்.

அவருடைய கௌரவப் பேராசிரியர்ப் பதவி 1994 ஜூலை மாதம் முதல் 1995 ஜூன் மாதம் வரையானது.

சிறுமி ரக்சனாவைக் காப்பாற்றியது தொடர்பாக பிரிட்டிஷ் பத்திரிகையான ''டெய்லிஸ்ரன்'' ''எமது மாபெரும் தங்கங்கள்'' என்ற தலைப்பில் 19-03-1992 இல் செய்தி வெளியிட்டதும் பின்னர் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் 'டெய்லிஸ்ரார்'ன் தங்க நட்சத்திரப் பதக்கத்தை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

அதுபற்றிய செய்தி உதயனில் முன்னர் வெளியாகி இருந்தது. ★

---

# குத்துக்கரணம் அடிப்பதில் தமிழக இளைஞர் சாதனை

சென்னை, ஜன. 8

தொடர்ந்து குத்துக் கரணம் அடிப்பதில் சென்னையைச் சேர்ந்த இளைஞன் பார்த்தசாரதி ''கின்னஸ்'' சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த அஸ்ரிடா பர்மென் குத்துக் கரணம் அடிப்பதில்—10மணித்தியாலம் 30நிமிட நேரத்தில்—8 ஆரத்துயி 347 முறை செய்து சாதனை நிலைநாட்டியிருந்தார்.

பார்த்தசாரதி, நேருஸ்ரேடியத்தில் 9மணித்தியாலம் 15நிமிட நேரத்தில் 8ஆயிரத்து 341 முறை குத்துக்கரணம் அடித்து முன்னைய சாதனையை முறியடித்தார்.

அவர் தொடர்ந்து பத்தரை மணி நேரத்தில் 9ஆயிரத்து 100தடவை குத்துக்கரணம் அடித்து புதிய சாதனையைப் படைத்தார். (ஒ-3)

# உதவி மருத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன. 8

உதவி மருத்துவர்களை சேர்த்து பயிற்சி அளித்து அவர்களுக்கு நியமனம் வழங்க தமிழீழ சுகாதாரச் சேவைப் பகுதியினர் முடிவு செய்துள்ளனர்.

தமிழீழ சுகாதாரச் சேவையினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் சுகாதார சேவைகள் பகுதியினரால் பெறப்பட்ட புள்ளி விவரங்களின் படி தமிழீழத்தில் மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள் ஆகியோரின் தேவையின் பெரும்பகுதி பூர்த்தி செய்யப்படாதிருப்பதும் —

தற்போது இத்தரங்களில் கடமையாற்றுபவர்களில் பெரும்பாலானோர் ஓய்வு பெறும் வயதில் அல்லது சேவை மூப்பிற்பின் கடமையாற்றுபவர்களாக உள்ளனர் என்பதும் — தெரியவந்துள்ளது.

இன்னும் ஒரு சில வருடங்களில் இவர்கள் ஓய்வுபெறும் போது தமிழீழத்தின் சுகாதாரசேவை மேலும் பல பாரிய நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

ஆகவே இவற்றைக் கருத்திற்கொண்டு எமது தேவைகளை நாமே பூர்த்தி செய்யக்கூடிய வகையில் முதற்கட்டமாக உதவி மருத்துவர்களை பயிற்றுவித்து மருத்துவர்களற்ற இடங்களில் அவர்களை சேவைக்கு அமர்த்துவதென தமிழீழ சுகாதார சேவையினர் தீர்மானித்துள்ளார்கள்.

இப்பயிற்சியினை விடுதலைப்புலிகள் மருத்துவப் பிரிவின் கல்விப்பகுதியினர் விரைவில் ஆரம்பிக்க உள்ளார்கள். இப்பயிற்சி நெறி சம்பந்தமான விவரங்கள் விரைவில் வெளிவர உள்ளன— என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-3)

## புலிகளின் குரல் வானொலியில்

**08 — 01 — 1995**
**ஞாயிறு இரவு**

★ 8-01 — தளிர்கள்—சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — கணப்பொழுது — சி. கண்ணம்மா எழுதிய ''வீரவேங்கைகள் ஜீவா, ரஞ்சன்''
★ 8-25 — நேயர்கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கவியரங்கம் — ''போராடும் தேசத்தின் புலர் காலைப் பொழுது''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**09 — 01 — 1995**
**திங்கள் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

**ஞாயிறு மாலை ஒலிபரப்பு**

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 —எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-20 —உங்கள் தெரிவுகள்
★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# கணிதபாட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜன. 8

கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு வடமராட்சி கணித மூலவள நிலையத்தினர் மாலை நேர கணித பாடச் செயலமர்வுகளை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் இலவசமாக நடத்தவுள்ளனர்.

அவற்றில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)


**SPOKEN ENGLISH**
By
**MR. BRITTO**
08—01—1995
புதிய பிரிவு
ஞாயிறு 5.45 pm
Time Table:-
Satlsun - 5.45 pm
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**SCIENCE COLLEGE**
எழிலகம் முன்
யாழ்ப்பாணம்.
(சி/126)



**MATHS CENTRE**
NELLIADY
94இல் பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது.
**DAY CLASS**
**PHYSICS**
8.00 — 9.15 a. m.
**CHEMISTRY**
9.15 — 10.30 a. m.
ஆரம்பம்:
**10 - 01 - 95**
(8184)


---

# கற்பகச் சோலைத் திட்டம்

*இரண்டாயிரம் ஆண்டில் இரண்டு கோடி பனைகள் என்ற இலக்கைக் கொண்ட கற்பகச் சோலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றி கரமாக நடைபெற்று வருகிறது. இது குறித்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு இது.*

தமிழீழ மக்களாகிய நாம் அன்று தன்னிறைவு பெற்றுத் தனிச்சிறப்புடன் வாழ வழி சமைத்த பெருவளங்களுள் பனை வளமும் ஒன்றாகும். எவ்வித கடினமான பாதுகாப்புகளும் இன்றி இயற்கையின் அரவணைப்பிலே தானாகவே வளர்ந்து தன் மண்ணின் மக்களுக்கு என்றும் பெரும் பயன் தருவது [illegible] வாகிய பனையாகும். பனையின் வளர்ச்சிக்கு என்ன வேண்டும் என அறிந்து நாம் ஒரு போதும் அதற்கு வழங்கியதில்லை. ஆனால் எமது வாழ்வுக்கு என்னென்ன தேவையோ அவற்றிலே பலவற்றைப் பனைமரம் எமக்கு வழங்குகிறது.

பனையின் வளத்தைப் பெருக்கும் நோக்குடன் 1991 ஆம் ஆண்டு 1 லட்சத்து 50 ஆயிரம் பனம் விதைகள், 1992ஆம் ஆண்டு 1லட்சத்து 57 ஆயிரம் பனம் விதைகள், 1993ஆம் ஆண்டு 3 லட்சம் 46ஆயிரம் பனம் விதைகள் தமிழீழத்தில் நடுகை செய்யப்பட்டன.

இன்று கற்பகச்சோலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பல லட்சம் பனம் விதைகளை நடுவதன் மூலம், ஒரு கோடி கொண்ட தமிழீழத்தின் பனை வளத்தை இரண்டாயிரமாம் ஆண்டளவில் இரண்டு கோடி [illegible] நிலங்கள் பயன்படுத்தப்படும். சூழல் பாதுகாப்பும் ஏற்படும்.

### முன்னோரின் அக்கறை

இன்று எமது மண்ணின் பனந்தோப்புகள் அன்று எம் முன்னோர் பனை வளர்ப்பதிலே காட்டிய அக்கறைக்கு எடுத்துக் காட்டாகும். அத்தோடு குடியிருக்கும் வளவுகளிலும் வீதியோரங்களிலும் ஆங்காங்கே பனைகள் உண்டு.

பொருளாதாரத் தடையைப் போட்டு அதன்மூலம் எம்மை எமது கால்களிலே நிற்பதற்குத் தூண்டிவிட்ட சிங்களப் பேரினவாத அரசின் செயல் எமது வளங்களைப் பற்றி எம்மை ஆழமாகச் சிந்திக்க வைத்தது. அதன் விளைவுகளில் ஒன்றாக, பெருக்கப்பட்டு வந்த பனை வளம் இன்று இன்னும் பல மடங்கு பெருகும் வாய்ப்பு ஏற்பட்டது.

பனைவளம் பெருகினால் தமிழீழ மண்ணிலே பலவளமும் பெருகும் என்பது உண்மை. ஏனென்றால் எமது [illegible] பலர் பனையின் பயனை மட்டுமே நம்பி வாழ்ந்ததோடு நோய் பிணி இன்றிப் பலகாலம் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையில் ஒவ்வொரு தேவையிலும் பனை பெரும் பயனை வழங்கியிருக்கிறது. நாமும் அப்படி வாழமுடியும்.

### மாவுக்குப் பதிலாக ஒடியல் மா

கூப்பன்மாவுக்குப் பதிலாக ஒடியல் மாவையும், சீனிக்குப் பதிலாகப் பனம் சீனியையும், சிறு இனிப்பு வகைகளுக்குப் பதிலாகப் பனாட்டையும் பாவிக்க முடியும். பனம்பழம் ஜாமும், பனம் பானங்களும் எமது மண்ணில் உற்பத்தியாக்கப்பட்டு உபயோகத்துக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழீழம் மலர வேண்டும் என்ற இலட்சியம் எம் தமிழீழ மக்களின் மனதிலே எந்த அளவுக்கு இருக்கின்றதோ அதேபோல நாம் எமது வளத்தைப் பயன்படுத்திய நிறைவும் இன்பமும் சுகமும் காண்போம் என்ற உயர்ந்த எண்ணமும் வளர வேண்டும். பனையை நம்பி வாழும் பனந்தொழில் வல்லுனர்கள் தமக்கென உரிய பனைகளிலே கஷ்டம் இன்றித் தொழில் செய்து வளமுடன் வாழக் கற்பகச் சோலைத் திட்டம் வழி சமைக்கும். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33 மாதகால பொஸ்னிய பிரச்சினையில் கார்ட்டரின் முயற்சியால் புதிய திருப்பம்!

## புத்தாண்டு முதல் நான்கு மாதகால யுத்த நிறுத்தம்

பொஸ்னியாவில் நான்கு மாத கால யுத்த நிறுத்தம் ஒன்றுக்கான ஒப்பந்தத்தில் பொஸ்னிய சேர்பியர்களும், பொஸ்னிய முஸ்லிம்களும், பொஸ்லிய குறோசியர்களும் கடந்த வாரம் கையெழுத்திட்டனர்.

முதலில் பொஸ்னிய முஸ்லிம்களும் பொஸ்னிய சேர்பியர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம்— அதாவது புத்தாண்டுடன் அமுலுக்கு வந்தது.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு நாட்களின் பின்னர் பொஸ்னிய குறோசியர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

### யுத்த நிறுத்தத்தின் பின்பும் தாக்குதல்

இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தான பின்பும் பொஸ்னியாவின் அண்டைநாடான குறோசியாவில் உள்ள குறோசிய சேர்பியர்கள், பொஸ்னியாவின் பீஹாஜ் (Bihac) நகரின் சுற்றுப் புறங்களில் நடத்தும் தாக்குதல்களும்—

பொஸ்னிய முஸ்லிம் அரசுக்கெதிரான முஸ்லிம் கிளர்ச்சிப் படைகள் பொஸ்னியாவில் உள்ள வேலிக்காகலாடுஸாவை (Velika klandusa) மீண்டும் கைப்பற்றுவதற்காக நடத்தும் தாக்குதல்களும் தொடர்கின்றன.

### ஐ. நா. தளபதியின் முயற்சி தோல்வி

இந்த குறோசிய சேர்பியர்களையும் முஸ்லிம் கிளர்ச்சிப் படைகளையும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு கொண்டு வருவதற்கு பொஸ்னியாவில் உள்ள ஐ.நா படைகளின் பிரதம தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சேர்மிச் செல்றோஸ் (LieutenantGeneralSirmichael Rose) மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை வெற்றி அளிக்கவில்லை.

சேர்பியர்களினால் தூண்டிவிடப்பட்டவர்கள் என நம்பப்படும் முஸ்லிம் கிளர்ச்சிப் படைகள் முன்னர் ஒரு கட்டத்தில் வேலிக்கா கலாடுஸாவைக் கைப்பற்றி இருந்தனர். முஸ்லிம் அரச படைகள் பின்பு அதனை மீட்டிருந்தன.

எனினும் அந்த நகரை மீண்டும் கைப்பற்றும் முயற்சியில் முஸ்லிம் கிளர்ச்சிப் படைகளின் தலைவர் பிக்றெற் அப்டிக் (Fikret Abdic) ஈடுபட்டு வருகிறார்.

### குறோசிய சேர்பியர்கள்

அண்டை நாடான குறோசியாவில் மூன்றில் ஒரு பகுதியை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் குறோசிய

**வெளி உலகில்**

சேர்பியர்களுடன் முஸ்லிம் கிளர்ச்சித் தலைவர் பிக்றெற் அப்டிக் நெருங்கிய உறவுகளை வைத்துள்ளார்.

குறோசியாவில் உள்ள சேர்பியர்கள் பொஸ்னியாவுடனான குறோசியஎல்லைக்குச் சமீபமாக உள்ள கறஜினா என்ற பகுதியை [Kra Jina] தனிக் குடியரசாகப் பிரகடனம் செய்துள்ளனர்.

பொஸ்னியாவில் உள்ள பீஹாஜ் நகரைக் கைப்பற்றி விட்டால் குறோசிய சேர்பியர்களின் கோட்டையாக விளங்கும் கஹஜினாவுடன் இணைப்புப் பாதை ஒன்றை ஏற்படுத்தி விடலாம் என்று பொஸ்னிய சேர்பியர்கள் கருதுகிறார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு வலயங்களில் ஒன்றாக இருந்த பிஹாஜ் நகரைக் கைப்பற்றுவதற்கு பொஸ்னிய சேர்பியர்கள் அண்மையில் நடத்தியதொடர் தாக்குதல்களின் உள் நோக்கம் இதுதான்.

தற்போதைய யுத்த நிறுத்தத்தால், பிஹாஜ் மீது திருப்பி விடப்பட்டிருந்த பொஸ்னிய சேர்பியர்களின் பீரங்கிகள் ஓய்ந்து விட்டன.

ஆனால் குறோசிய சேர்பியர்களும், முஸ்லிம் கிளர்ச்சிப் படைகளும் தமது சிறிய கனரக ஆயுதங்கள் கொண்டு தொடர்ந்து தாக்கி வருகின்றனர்.

### செயலிழந்து போன யுத்த நிறுத்தங்களும் தீர்வுத் திட்டங்களும்

33 மாதகாலமாக நடைபெற்ற பொஸ்னிய யுத்தம் பல தீர்வுத் திட்டங்களையும்—

யுத்த நிறுத்தங்களையும்— கடந்த காலங்களில் கண்டு விட்டது.

யுத்த நிறுத்தங்கள் ஒரு சில மணித்தியாலங்களில், அல்லது ஒரு சில நாட்களில் செயலற்றுப் போயிருந்தன.

பொஸ்னியப் பிரச்சினைக்கு கடைசியாக சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஐந்து நாடுகள் கூட்டாகச் சமர்ப்பித்திருந்தன.

இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு தோல்வி கண்டதே வானஸ் — ஒவென் (Vance—Owen) தீர்வுத் திட்டம். ஒரு மத்திய அரசின்கீழ் பொஸ்னியாவை பத்து மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்துக்கும் சுயாட்சிவழங்கும் திட்டத்தை வான்ஸ்— ஒவென் தீர்வுத் திட்டம் கொண்டிருந்தது.

இது தோல்வி அடைந்ததை அடுத்தே கடைசியாக அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளும் இணைந்து தீர்வுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தன.

வான்ஸ் — ஒவென் திட்டத்தை விட கடைசியாகச் சமர்ப்பிக்கப்பட்ட 5 நாடுகள் தீர்வுத் திட்டம் முன்னேற்றகரமானதாக இருந்த போதிலும் பொஸ்னிய சேர்பியர்கள் இத்திட்டத்தையும் நிராகரித்திருந்தனர்.

பொஸ்னியாவைத் துண்டாடும் விதத்தில் பொஸ்னிய சேர்பியர்களுக்கு 49 சத வீத நிலத்தையும் பொஸ்னிய முஸ்லிம்களுக்கும் பொஸ்னிய குறோசியர்களுக்கும் (Moslem — Croat Federation) 51 சத வீத நிலத்தையும் வழங்கும் விதத்தில் இந்த ஐந்து நாடுகள் தீர்வுத் திட்டம் அமைந்திருந்தது.

பொஸ்னிய முஸ்லிம் அரச தரப்பினர்—

பொஸ்னிய சேர்பியர்கள்—

பொஸ்னிய சேர்பியர்களின் போராட்டத்துக்கு உதவியாக இருந்து வந்த சேர்பியா—

மற்றும் உலக நாடுகள்— அனைத்துமே இந்த தீர்வுத் திட்டத்தை ஆதரித்த போதிலும் பொஸ்னிய சேர்பியர்கள் இதனை எதிர்த்தனர்.

பொஸ்னியாவில் தமது கட்டுப்பாட்டில் 70 சதவீத நிலப்பரப்பு இருப்பதால் குறைந்த அளவு 49 சதவீத நிலப்பரப்பைத்தரும் இத்தீர்வுத் திட்டத்தை ஏற்க முடியாது என்று பொஸ்னிய சேர்பியர்கள் தெரிவித்திருந்தனர்.

5 நாடுகள் தீர்வுத் திட்டத்தை ஏற்குமாறு கிளின்ரன் நிர்வாகத்தினால் பொஸ்னிய சேர்பியர்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த காலக்கெடுக்களும் பயன் அற்று காலாவதியாக இருந்தன.

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பகம்

### கைகொடுத்த கார்ட்டரின் திட்டம்

ஆகவே அமெரிக்காவுக்கு இருந்த கடைசி வழி பொஸ்னியாவில் இருந்து ஐ. நா. படைகளை வாபஸ் பெற்று விட்டு பொஸ்னியப் பிரச்சினையை ராணுவ ரீதியில் தீர்க்கும் பொறுப்பை தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்த 5 நாடுகளிடம் விடுவதே.

இப்படியான ஒரு நெக்கடியான கட்டத்திலேயே அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரின் தலையீடு இடம் பெற்றது.

பொஸ்னிய சேர்பியர்களே கார்ட்டரை பொஸ்னியாவுக்கு அழைத்திருந்தனர்.

கார்ட்டர் கடந்த மாதமுற்பகுதியில் பொஸ்னியாவுக்கு வந்து பொஸ்னீய சேர்பியத் தலைவர் ரடொவன் காரட்சிக் (Radovan Karadzic) மற்றும் தலைவர்களுடனும்—

பொஸ்னிய முஸ்லிம் தலைவர்களுடன் — பேச்சு நடத்தினார்.

அந்த பேச்சுவார்த்தையின் ஆரம்ப பெறுபேறுகளே தற்போதைய நான்கு மாத கால யுத்த நிறுத்தம் ஆகும்.

5 நாடுகள் தீர்வுத் திட்டத்தை அடிப்படையாக வைத்து மேலும் பேச்சுவார்த்தையை நடத்தி பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கும் பொஸ்னிய சேர்பியர்களும், பொஸ்னிய முஸ்லிம் அரச தரப்பினரும், பொஸ்னிய குறோசியர்களும் இணங்கி உள்ளனர்.

அனேகமாக சமாதானப் பேச்சுக்கள் இம் மாதம் மூன்றாம் வாரம் ஆரம்பமாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### முன்னாள் யூகோஸ்லாவியா

முன்னாள் யூகோஸ்லாவியாவின் ஆறு சமஷ்டி அமைப்புக்களில் பொஸ்னியாவும் ஒன்று.

1992ஆம் ஆண்டு இந்த சமஷ்டி அமைப்புக்கள் பிரிந்து தனித்தனி நாடுகளாகின.

சேர்பியாவும் மொன்ரேநேக்ரோவும் இணைந்து இன்னும் பழைய யூகோஸ்லாவியாவின் பெயரையே தாங்கி நிற்கின்றன. தலைநகராக பெல்கிறேட் இருந்து வருகிறது.

மற்றைய நான்கும் ஸ்லோவேனியா, குறோசியா, மக்கடோனியா, பொஸ்னியா ஆகும்.

பொஸ்னியாவின் முழுப் பெயர் பொஸ்னியா — ஹெர்செகோவினா (Bosnia—Herzegovina).

சேர்பியா — மொன்ரேநேக்ரோவில் 92 சதவீத

**சஞ்சாரன்**

சேர்பியர்களும் —

ஸ்லோவேனியாவில் 97 சதவீத ஸ்லோவேனியர்களும் —

குறோசியாவில் 80 சதவீத குறோசியர்களும் —

மக்கடோனியாவில் 80 சதவீத மக்கடோனியர்களும் — வாழ்வதால் 1992 இல் ஆட்சி மாற்றங்கள் பிரச்சினை இல்லாமல் நிகழ்ந்தன.

### பொஸ்னியாவில் நிலைமை வேறு

ஆனால் பொஸ்னியாவில் நிலைமை வேறாக இருந்தது. ஆட்சி மாற்றத்தின் போது முஸ்லிம்களின் அரசு பதவியில் இருந்தது.

பொஸ்னியாவில் முஸ்லிம்கள் 38 சதவீதமும், சேர்பியர்கள் 37 சதவீதமும், குறோசியர்கள் 24 சதவீதமும் இருந்தனர்.

1992 இல் பொஸ்னிய நாடாளுமன்றம் பொஸ்னியாவை தனி நாடாகப் பிரகடனம் செய்த போது பொஸ்னிய சேர்பியர்கள் அதனை

(4 ஆம் பக்கம் பார்க்க)


# பற்றீஷன் தொழில் பயிற்சி நிறுவனங்கள்

# PATRICIAN INSTITUTES

## ★ தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள்

**வாரஇறுதி வகுப்புகள்: 21-01-95 சனிக்கிழமையும், வாரநாள் வகுப்புகள்: 18-01-95 புதன்கிழமையும் ஆரம்பமாகின்றன.**

**01. Computer Processing**

1. Programming in BASIC Languages (GW BASIC Including Advanced (BASIC) and MS - DOS
   ★ DURATION — 4 Months
2. Word Processing (Word Star Professional Rel. 5.0) and MS-DOS
   ★ DURATION — 4 Months
3. LOTUS 1-2-3 (Spread Sheet Analysis) and MS-DOS
   ★ DURATION — 3 Months
4. dBASE-III PLUS and MS-DOS
   ★ DURATION — 4 Months
5. PASCAL
6. CLIPPER
7. C Language

Equipment Used: LASER XT/2, XT/3, 386 and Bitcom Computers.
(IBM Compatibles) (Theory and Practicals)
(பல்கலைக் கழக அனுமதி பெற்றோர், மற்றும் G. C. E (O/L) பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருப்போருக்கான விசேட குறுகிய காலப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்)
(கூடிய நேரச் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்)

**02. Civil Draughtsmanship and Quantity Surveying**

COURSE COVERS;
★ Draughtsmanship
★ Building Constructions
★ Engineering Drawing
★ Theory & Practical Drawing
★ Civil Engineering Material
★ Estimating
★ Measurements of Building Works, Electrical
★ Fundamental of Electricity
★ Project
★ Builders Quantity
★ Qualification: G. C. E. (O/L)
★ DURATION — 6 Months

**03. City and Guilds of London Exam (Year 96 / 97)**

★ QUANTITY SURVEYING (PART I, II & III)
Qualification: G. C. E. (O/L)
★ DURATION: 8 Months

**04. Book Keeping and Accounts with Costing**
(வார இறுதி வகுப்புக்கள்)
(a) I. A. B. லண்டன் உட்பட சகல பரீட்சைகளுக்கும் உகந்த வகையில் தமிழ் விளக்கத்துடன் பயிற்சிகள் நடைபெறும்.
(b) அச்சிடப்பட்ட பாடக் குறிப்புகளும் வழங்கப்படும்.
★ DURATION — 8 Months

**05. Speak Well English and Elocution Practice (SWEEP)**
ஆங்கில பேச்சுத் திறனும், உரையாடற் பயிற்சியும் (வார இறுதி வகுப்புக்கள்)

**06. TOEFL (Test Of English as a Foreign Language)**
★ DURATION — 4 Months

**07. Short – Hand and Typing (English)**
சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (LONDON, PITMAN பரீட்சைகள் உட்பட சகல பரீட்சைகளும் ஏற்ற வகையில்)

**08. General Motor Mechanism**
**மோட்டார் வாகனங்கள் திருத்துதல் (Petrol & Diesel)**
மோட்டார் சைக்கிள்கள், நீர் இறைக்கும் பம்பி, ஜெனரேற்றர், கார், லொறி எஞ்சின்கள் (பெற்றோல் டீசல் யாவும்) அத்துடன் மோட்டார் வாகனங்களின் மின் உபகரணங்களைப் பழுது பார்த்தலும், மின்னேற்றலும், மின்சார இணைப்பும்
★ DURATION — 6 Months

**09. Electrical Wiring மின்சார இணைப்பு**
★ வீட்டு மின்சார இணைப்பு
★ தொழிற்சாலை மின்சார இணைப்பு (Single Phase & Three Phase)
★ DURATION — 3 Months

**10. Motor Rewinding மோட்டார் ரீவைன்டிங்**
★ அடிப்படை மின்னியல், காந்தவியல், ஆமச்சர், மின் மாற்றிகள், (Single Phase Motor and Fan Three Phase)
★ DURATION — 4 Months

**11. General Electrician ஜெனரல் எலக்ரீஷன்**
★ அடிப்படை மின்னியல் (AC/DC), அடிப்படை இலத்திரனியல்
★ [illegible] மின் இயந்திரங்கள் (Repair and Rewinding)
★ வீட்டு மின்சுற்று, வாகனங்களுக்கான மின்சுற்று
★ THREE PHASE (மோட்டர் மின் பிறப்பாக்கிகள் குளிர் சாதனப் பெட்டி, காற்றுச் சீராக்கிகளுக்கான மின் இணைப்பும், மின் பழுதுகளும், நிவர்த்தி செய்தலும்.
★ DURATION — 6 Months

**12. Lathe Machine Operation**
**கடைச்சல் இயந்திர தொழிற் பயிற்சி**
★ DURATION — 3 Months

**13. Arc Welding மின் ஒட்டுநர் பயிற்சி**
★ DURATION — 2 Months

குறிப்பு:
★ பயிற்சிக் கட்டணங்களை தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
★ வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பேரில் கட்டணத்தில் சலுகையை பெற்றுக் கொள்ளலாம்.
★ மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று உடன் பதிவு செய்து கொள்ளவும்.
★ எமது நிறுவனத்தில் N. A. B. பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை (12-01-1995) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும். எனவே அதற்குத் தேவையான சகல ஆவணங்களுடனும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**வாகன தகுதிச் சான்றிதழ் - 1995**
**Fitness Certificate for Motor Vehicle – 1995**

1995ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகனத் தகுதிச்சான்றிதழ் திரு A.S. குணசீலன் (Automobile Engineer Certifying officer for Motor Vehicle Fitness) அவர்களால் எமது ஸ்தாபனத்தில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீஷன்
உயர் கல்வி நிறுவனம்
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES
59, ST. PATRICK'S ROAD.
JAFFNA.

[சி-123]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Honda CD-70 மிகவும் நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 48/1, முதலாம் ஒழுங்கை, ஐங்கரன் விளையாட்டுக்கழக வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [34554]

நல்ல நிலையில் உள்ள றொபின் ஜெனரேட்டர் (1.5 K.W) விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: யோகா கலையகம், சுன்னாகம். [7850]

புதிய ஜெனறேற்றர் (என் பீல்ட்) 230 V. 1100W. 60 மணித்தியாலங்கள் மட்டுமே பாவித்தது. உடனடி விற்பனைக்குண்டு. R. A. இரட்சகன், வட்டு. றோட், சித்தன்கேணி. (34569)

### அப்பியாசக்கொப்பி

பாடசாலை மாணவர்களுக்காக அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கு அருகில்], யாழ்ப்பாணம். [சி-255]

### ரி. வி., டெக் திருத்துதல்

சகல றேடியோக்கள் ரி வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

### ஓடர்கள் கவனிக்கப்படும்

சிறுவர் பெரியோர்களுக்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி பிளவுஸ், ஆண்களுக்கான ரவுஸர் ஷேர்ட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்து பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள் தொடர்பு: சிற்றி காமன்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. கிளை: சிவபதி, இணுவில். [சி-74]

### மணமகள் தேவை

வயது 46, வெளிநாட்டில் வேலை வாய்ப்புள்ள, சிறிதளவு ஆஸ்மா பாதிப்புள்ள, ஆரோக்கியமான, தாரமிழந்த குகவம்சத்தவருக்கு நற்குணமுள்ள, அழகிய, படித்த, பொருத்தமான மணமகள் தேவை. தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகொள்ளவும். கனகரத்தினம், 17ஆம் கட்டையடி, மூளாய்ப்பிள்ளையார் கோயிலடி, மூளாய். [34545]

### இலகு திருமண சேவை

38 வயது, ரேவதி. செவ்வாயற்ற U.K.இல் தொழில் புரியும் மணமகனுக்கு மணப்பெண் U.K.இல் அல்லது அனுப்பக் கூடியவர் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. [34532]

31 வயது, பூராடம், செவ்வாயற்ற U.K. இல் வசதியாகவுள்ள மணமகனுக்கு U.K. மணமகள் அல்லது இங்கிருந்து செல்லக்கூடிய அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, யாழ். நாச்சிமார், கோயிலடி. [34553]

### சங்கீதம் வினா-விடை

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் தரம் 2, 3 பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கும் ஆண்டு 6—11 வரை சங்கீதம் கற்போருக்கும் பயன் தரும் சங்கீதம் வினா-விடை நூல் விற்பனையாகிறது. ஆக்கம்: செல்வி "[illegible]" விற்பனை: ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், பூபாலசிங்கம் பொத்தகக் களஞ்சியம், யாழ்ப்பாணம். (34586)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் நாள்தோறும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. [34557]

Broiler இறைச்சிக் கோழி தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [அறிவகம் புத்தக சாலை அருகில்] [35488]

### தவறிவிட்டது

மறவன்புலோவிலிருந்து இணுவிலுக்கு செல்லும் வழியில் இரண்டு பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல: 819, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [34544]

ஆலங்கேணி இறங்குதுறையில் இல. 1316 டிராக்டரில் 31-12-94 முக்கிய தஸ்தாவேஜுகள், உடுப்புகள் அடங்கிய Ash Colour bag தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து Mrs. R. சண்முகலிங்கம், மே/பா V. பொன்னம்பலம், றோயல் டிஸ்பென்சறி, யாழ்ப்பாணம் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [34561]

எனது அடையாள அட்டை, உணவுமுத்திரை, குடும்பப்பதிவு அட்டை, 24-12-94 அன்று கல்வியங்காடு சந்தி — முத்திரைச் சந்திக்கிடையில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கணபதிப்பிள்ளை— தில்லையம்மா, 11/14, செம்மணி லேன், (சாமுவேல்) நல்லூர் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (34576)

குளப்பிட்டி தேவாலயத்திற்கும், கொக்குவில் சந்திக்கும் இடையில் பிறவுண் பையுடன் கலர் படங்கள் 26-12-94 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். B. புவனேஸ்வரி, C/o முருகதாஸ், இல. 41, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (34577]

முக்கிய கடிதங்களும், சிறுவனின் படங்களும் அடங்கிய பை ஆலங்கேணிக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். P. தேவசகாயம், இல. 20, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (34573)

### காணவில்லை

வெள்ளையும் லைற் பிறவுண் நிறமும் கலந்த பொமனேரியன் பெண் நாய் 04-01-95 இரவிலிருந்து காணவில்லை. தகவல் தருபவர் - பிடித்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். ந. கதிரவேலு (தம்பு), (பிரதம தபாற்கந்தோர்), 29, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (34579)

### கோழிக்குஞ்சு விநியோகம்

கறுப்பு வரி சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர் கொடுத்தவர்களும் உடன் பெற்றுக்கொள்ளவும். மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி, உடுவில். (7853)

### சித்திரம்

ஆண்டு 6, 7, 8 Bright இன் மாணவர்களுக்கான சித்திரம் விலை 50/- எழுதியது சுமதி ரஞ்சகுமார் B. A. (Hons), பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (34565)

### ஜோதிட விஞ்ஞானம்

25-03-95 வரை செவ்வாய் வக்கிரம், பகை, நீறு பெலவீனமாவதால் யுத்த நிறுத்தம், அமைதிப் பேச்சுக்கள், பரிணாம வளர்ச்சியடையும் (சத்யாவின்) புத்தாண்டுப் பலன்கள் ரூ. 10/- விற்பனையாகின்றது. மது புத்தகசாலை கொக்குவில் சந்தி (7855)

### கைமாறிவிட்டது

எனது நீலநிறப் பிரயாணப்பை 06-01-95இல் கிளாலிக் கரையில் கைமாறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. பிறைசூடி "அன்னை இல்லம்" சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (34583)

### திருமண சேவை

பட்டதாரிகள், நிர்வாக சேவை அதிகாரிகள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள் மற்றும் பல தரமான மணமக்களின் சாதகக் குறிப்புகள் உண்டு. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்: மகரம், கே. தனநாயகம், டச் றோட், மீசாலை வடக்கு, மீசாலை. புதன் கிழமைகளில் இலட்சுமி நகைமாடம், இல. 312, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [34571]

---

## வாடிக்கையாளர்களின் சிரமத்தை தவிர்க்க

**எமது வாடிக்கையாளர்களே!**

நீங்கள் எங்களுடன் கடித மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் வானொலி, ரேப்றெக்கோடர்கள், ரி. வி. டெக் மற்றும் சுவர் மணிக்கூடுகளை நேரடியாக உங்கள் இல்லங்களில் வந்து பெற்று, குறைந்த செலவில் பழுது பார்த்து உங்கள் இல்லங்களிலேயே குறித்த தவணையில் ஒப்படைப்போம். (எம்மிடம் மின் வசதியுண்டு)

(குறிப்பு: கடித மூலம் தொடர்பு கொள்பவர்கள் முகவரியை தெளிவாக எழுதவும்)

**டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்**
284, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-265]

---

## உடுவில் மகளிர் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

**B. A. ( Part I ), B. A. (Final)**
(யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்)

**ஆரம்பம்: 09-01-95**
திங்கள் 3 மணி

(சி-119)

---

## எங்கள் பரமேஸ்வரி அம்மா இறையடியில் சேர்ந்து வாழ்க

புங்கைநகர் கோவிலிலே அம்பிகைக்கு
புதுவண்ணச் சேலை கட்டி அழகு பார்க்கும்
எங்கள் குல பரமேஸ்வரி அம்மா என்றும்
ஈழமது போற்றுகின்ற பணிகள் காத்தார்.
தங்கநிற அம்பிகையின் தயவில் வாழ்ந்து
தலைவருடன் மருகரும் மகளும் மகிழ்ந்து வாழ
மங்காப் புகழோடு மனையறம் காத்து நின்ற
எங்கள் பரமேஸ்வரி அம்மா இறையடியில்-
சேர்ந்து வாழ்க!

பிரம்மஸ்ரீ மீனாட்சிசுந்தரக் குருக்கள் அவர்களின் பாரியார் பரமேஸ்வரி அம்மா அவர்களின் ஆத்மா மீனாட்சி சுந்தரேஸ்வரனின் பாதங்களில் சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:
அனலைதீவு புளியந்தீவு,
அமரர் பிரம்மஸ்ரீ நடராசக் குருக்களின்
குடும்பத்தினர்.

(34585)

---

## ஏல விற்பனை 19-01-95

1. ஐந்துதலை நாகபாம்பு வாகனம் ஒன்று
2. சிறிய சப்பறம் யாழிகள் பீடத்துடன் ஒன்று

தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரங்களில் பார்வையிடலாம்
**05-01-95 — 19-01-95** வரை

தொடர்பு கொள்ளவும்:

தலைவர்,
**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்— தேவஸ்தானம்.**
யாழ்ப்பாணம்.

(34570) -தேவஸ்தானம்.

---

## பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில்
## மார்கழி மாத
# ★ 5-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

பொல்லாங்கு போயகலும் புல்லாங்குழல் கேட்கும்
பொன்னாலைக் கோயிலென்றால் உள்ளம் பொங்கும்
நல்ல கண்ணாளன் கண்ணனைக் கண்களால் கண்டு தொழும்
பெரும் பேறும் வருவோர்க்கு தினம் சேரும்
ஊருமொரு தேராகும், பேரும் திருப் பொன்னாகும்
பாருமந்தப் பரந்தாமன் படுத்தாழும்
இது தோரோடும் திருவோடும் திருமாலும் தினம் வாழும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்.

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்

(34506)

---

JAFFNA DISTRICT A.A.A.

யாழ். மாவட்ட
## மெய்வன்மை வீரர்களுக்கு திறமையை வெளிப்படுத்த
## ஓர் அரிய சந்தர்ப்பம்!

யாழ். மாவட்ட
அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்
யாழ். றோட்டறிக் கழகத்தின்
ஆதரவுடன் நடத்தும்
**மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள்**
பெப்ரவரி முதல் வாரத்தில்!

விண்ணப்பப் படிவங்களைப் பெற:

- சண். தயாளன் (யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்)
- கே. டபிள்யூ. விமலராஜன் (மாவட்ட விளையாட்டு அதிகாரி, யாழ். செயலகம்)
- சொ. விஜயராஜா (சொக்கன்) (ஐயனார் கலட்டி, பருத்தித்துறை.)
- ஜே. எஸ். ரி. புத்தக நிலையம் (பழைய நீதிமன்றம் முன்பாக) கண்டி வீதி, சாவகச்சேரி.
- உதயன் சேவை நிலையம் கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

செயலாளர்,
யா. மா. அ. மெ. ச.

(சி-112)

---

# கணனி மூலம் அடையாள அட்டை

கணனி மூலமாக அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள அடையாள அட்டை வழங்கும் முறையில் இடம் பெறும் மோசடிகளை தவிர்க்கவும்—

அடையாள அட்டையில் மாற்றம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தவும்— கணனி மூலமான அடையாள அட்டைகள் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதியில் இருந்து 10 வருடத்துக்கு செல்லுபடியாகும் என்றும்—

அடையாள அட்டையில் மும்மொழிகளிலும் விவரங்கள் இருக்கும் என்றும்— அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா கடந்த புதன் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (இ-3)

---

# 33 மாத கால......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சேபித்தனர்.

அவர்கள் அன்று ஆரம்பித்த யுத்தமே இதுவரை 2 லட்சம் பேரைப் பலி கொண்டு, 10 லட்சத்துக்கு மேற்பட்ட மக்களை இடம் பெயர வைத்துள்ளது.

### ஐரோப்பாவில் மோசமான யுத்தம்

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் ஐரோப்பாவில் நிகழ்ந்த மிகவும் மோசமான யுத்தமாக பொஸ்னிய யுத்தம் கருதப்படுகிறது.

பொஸ்னியப் பிரச்சினையை கிளின்ரன் நிர்வாகம் அணுகும் முறை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருந்தது.

பிரச்சினையைத் தீர்ப்பதில் கூட்டு முயற்சி ஏற்படுத்தக் கூடிய சிக்கல்களை கிளின்ரன் நிர்வாகம் குறைவாக எடைபோட்டு விட்டது என்றே தெரிகிறது.

கூட்டாக தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பித்த 5 நாடுகளில் ரஷ்யா, பொஸ்னிய சேர்பியர்களுக்கு அனுதாபமாக நடந்து வருகிறது.

பொஸ்னிய சேர்பியர்களின் பகுதிகளில் நேட்டோ நடத்தும் தாக்குதல்களை ரஷ்யா எதிர்க்கிறது.

அதே போன்று பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் பொஸ்னிய சேர்பியர்களை கடுமையாகத் தண்டிப்பதை எதிர்க்கின்றன.

அமெரிக்கா பொஸ்னிய சேர்பியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறது. பொஸ்னிய முஸ்லிம்களுக்கு சார்பாக நடக்கிறது.

இந்த 5 நாடுகள் தீர்வுத் திட்டம் வல்லரசுகளையே பிளவு படுத்தி இருந்தது.

### சரயேவோ முற்றுகை நீங்கும்

தற்போது பொஸ்னியாவில் அமுலுக்கு வந்துள்ள யுத்த நிறுத்தத்தினால் தலைநகர் சரயேவோ (Sarajevo) மீதான ஆயிரம் நாள் முற்றுகை முடிவுக்கு வரலாம் என்று கருதப்படுகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சிவிலியன்களின் வாகனங்கள் சரயேவோவுக்குள் செல்வதற்கு பொஸ்னிய சேர்பியர்கள் இணங்கி உள்ளனர்.

ஐ.நா. படையினர் சுதந்திரமாகவும் —

பாதுகாப்பாகவும் — சரயேவோவுக்குள் நடமாடவும் பொஸ்னிய சேர்பியர்கள் உத்தரவாதம் அளித்துள்ளனர்.

இதற்குக் கைமாறாக சரயேவோவின் சூழலில் உள்ள மவுண்ட் இக்மான் (Mount-Igman) யுத்த சூன்யப் பகுதியில் இருந்து பொஸ்னிய முஸ்லிம் படைகள் வாபஸ் பெறவேண்டும் என்று பொஸ்னிய சேர்பியர்கள் கோரி உள்ளனர்.

கரிபியன் தீவான ஹெய்ட்டியில் அமெரிக்க ராணுவத் தலையீடு மூலம் பெரும் இரத்தக் களரி ஏற்பட இருந்த சமயம் கார்ட்டரின் தலையீடு பிரச்சினையைச் சமாதானமாகத் தீர்த்து வைத்தது.

அதே நிலைமையே இன்று பொஸ்னியாவிலும் நடந்துள்ளது.

சகல தீர்வுத் திட்டங்களும் தோற்றுப் போன நிலையில் —

அமெரிக்காவின் தலையில் பொறுப்பு விழவிருந்த சமயம் —கார்ட்டரின் சமாதான முயற்சி போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் அளவுக்கு உருப்படியான பலனை அளித்திருப்பது 33 மாத கால இரத்தக் களரிக்கு முடிவு ஏற்படும் சாத்தியத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

★

---

## நடமாடும் சிறுவணிகர் நலன் பேணும் மன்றம்
அமைப்பதற்கான
## அறிவித்தல்

நடமாடும் சிறு வியாபாரிகளின் நலன் பேணும் வகையில் மேற்படி மன்றம் ஒன்றினை அமைத்து அவர்களைத் தொழில் ரீதியாக ஊக்குவிப்பதற்கும், ஏனைய வகையில் மேம்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் கீழ் குறிப்பிடப்படும் வியாபாரத் தொழிலில் ஈடுபடுபவர்கள் திருமாட்டி புடைவையகம் அருகில், பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்திருக்கும் மேற்படி மன்றத்தின் பணிமனையில் தங்கள் உறுப்புரிமையைப் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. கச்சான், கடலை வியாபாரிகள்.
2. நடமாடும் இனிப்புப் பண்ட வியாபாரிகள்.
3. நடமாடும் பழ வியாபாரிகள்.
4. நடமாடும் மரக்கறி வியாபாரிகள்.
5. நடமாடும் ஐஸ்பழ வியாபாரிகள்.
6. நடமாடும் அழகு சாதனப் பொருள்கள் வியாபாரிகள்.
7. நடமாடும் பனம் பொருள் உற்பத்தி வியாபாரிகள்.
8. எண்ணெய் வியாபாரிகள்.
9. சிறு விளையாட்டுப் பொருள்கள் வியாபாரிகள்

போன்ற ஏனைய நடமாடி / நகர்ந்து வியாபாரம் செய்யும் அனைத்து வியாபாரிகளும் பதிவில் உள்ளடக்கப்படுவர். (மொத்த வியாபாரிகள் நிரந்தரமாகக் கடை அமைத்து வியாபாரம் செய்வோர் பதிவு செய்யப்பட மாட்டார்கள்)

**பதிவுக் காலம்:**
12-01-1995 முதல் முடிவு திகதி அறிவிக்கும் வரை 10 நாட்களுக்கு பதிவு இடம்பெறும்.

**பதிவு செய்யும் நேரம்:**
காலை 9 மணி முதல் பி. பகல் 3 மணிவரை.

**பதிவு செய்யும் இடம்:**
திருமாட்டி புடைவையகம் அருகில், பலாலி வீதி, திருநெல்வேலி என்னும் முகவரியில் அமைந்திருக்கும் நடமாடும் சிறு வணிகர் நலன் பேணும் மன்றப் பணிமனையில் பதிவு செய்யப்படும்.

நன்றி.

**நடமாடும் சிறுவணிகர் நலன் பேணும் மன்ற அமைப்புக் குழு.**

திருமாட்டி புடைவையகம் அருகில்,
பலாலி வீதி,
திருநெல்வேலி. 06-01-1995. (34580)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மறக்கக் கூடாத பாடம் இது!

அரசு விடுதலைப் புலிகள் இடையேயான மோதல் தவிர்ப்பு உடன்பாடு இன்று அதிகாலை முதல் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

இதன் மூலம் "ஈழம் யுத்தம்—II" ஆரம்பமாகி சுமார் ஐம்பத்தைந்து மாதங்களின் பின்னர் துப்பாக்கிகளுக்கு ஓய்வு வந்திருக்கிறது.

இந்த நாலரை வருடகாலத்தில் ஒரு புறத்தில் ஸ்ரீலங்கா அரசின் கடும் யுத்தக் கெடுபிடிகளுக்கு ஈடுகொடுத்துக் கொண்டு, மறுபுறத்தில் தமது தாயகத்தை ஒரு சுதந்திர பூமியாகக் கட்டி எழுப்பும் முயற்சியில் ஈழத் தமிழர்களும் அவர்களின் அரசியல், போராட்ட சக்தியின் வெளிப்பாடான தமிழீழ விடுதலைப் புலிகளும் கணிசமான வெற்றி கண்டிருக்கிறார்கள்.

1983 இல் அப்போது ஸ்ரீலங்கா ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என எக்காளமிட்ட காலம் முதல், ஸ்ரீலங்கா அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்த போதெல்லாம், இறுதியில் அவை, தமிழ் மக்களின்—விடுதலைப் புலிகளின்—கழுத்தில் வெற்றிமாலைகளாக வந்து விழுந்ததைத்தான் நாம் யதார்த்தத்தில் கண்டிருக்கிறோம்.

இந்த யதார்த்த உண்மைதான், மோதல் தவிர்ப்பு யுத்த நிறுத்தம், சமாதானத் தீர்வு முயற்சி என்ற நெறிகளின்பால் ஸ்ரீலங்கா அரசை திருப்பி விட்டிருக்கின்றது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

சுருங்கச் சொன்னால் எமது பலத்தின் மீதான அவர்களின் பயத்தின் விளைவே, ஈழத் தமிழரின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையின்பால் ஸ்ரீலங்கா அரசின் கவனத்தைச் செலுத்த தூண்டியிருக்கின்றது.

எனவே இந்த மோதல் தவிர்ப்பு, அதன் பின்னர் வரக் கூடிய போர் நிறுத்தம், அதைத் தொடர்ந்து இடம்பெறக் கூடிய புனரமைப்பு, புனர்வாழ்வு வேலைகள், சமாதான முன்முயற்சிகள் ஆகியவற்றுக்கு மத்தியில்—

எமது இராணுவ, பொருண்மிய, சமூக பலத்தை பேணுவதிலும் விருத்தி செய்வதிலும் நாம் அசமந்தமாக இருந்து விடக் கூடாது.

இந்த விவகாரத்தின் ஆழத்தை நன்கு உணர்ந்து கொண்டிருக்கும் போராளிகளும் தலைவர்களும் மிக அவதானமாக இருப்பார்கள் என்பது உறுதி. ஆனால் பொதுமக்களாகிய நாம் சமாதானச் சூழலில் வரக்கூடிய மாய மான்களைக் கண்டு — நம்பி— மோசம் போய்விடக் கூடாது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலைகள், எமக்கு நிரந்தர சமாதானத்தையும் விடிவையும் உறுதிப்படுத்தும் நிலையை எட்டும் வரை, நாம் அவதானமாகவும் எச்சரிக்கையாகவும் செயற்படுவது அவசியம்.

சமாதானத் தீர்வின் பால் தமக்குள்ள உண்மையான நாட்டத்தை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்திய போது, புதிய ஸ்ரீலங்கா அரசும் பதில் நல்லெண்ண சமிஞ்ஞைகளை வெளிப்படுத்தியிருக்கிறது.

இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு உண்மையாக நடந்து கொண்டு, ஈழத் தமிழர்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வைத் தரும் என நம்புவோம்.

நம்பிக்கையை மட்டுமே கட்டிக்கொண்டு நாம் மோசம் போய்விடக்கூடாது என்பதிலும் உறுதியாய் இருப்பது பிரதானமாகும்.

நியாயமான — தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய இறுதித் தீர்வு கிட்டும் வரை—

சமாதான முன்முயற்சிகளில் இதய சுத்தியுடன் ஈடுபடுவோம். அதேவேளை அதில் நம்மை ஏமாற்ற இடம் கொடுக்காது எச்சரிக்கையாக இருப்போம்.

போர் தணிந்து சமாதான சூழ்நிலைக்குள் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் கடந்த கால படிப்பினைகளின் விளைவாக — எமக்கு நாமே சொல்லிக் கொடுத்து, புரிந்து கொள்ள வேண்டிய பாடம் இது. எக்கணமும் மறந்து விடலாகாத ஒன்று.

# போர் இடை நிறுத்தம் பேணப்படுவதிலேயே
# சமாதான முயற்சியின் வெற்றி உள்ளது!

அமைதியும் சமாதானமும் ஆகாயத்தில் இருந்து விழுபவை அல்ல. அவற்றை உருவாக்குபவர்களும் மனிதர்களே; குலைப்பவர்களும், குழப்புபவர்களும் அவர்களே.

வடக்கு – கிழக்கில் கடந்த நாலரை வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வந்த போர் இன்று அதிகாலை தொடக்கம் ஓய்வுக்கு வந்துள்ளது. போரை இடைநிறுத்துவதற்கு அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், தமிழர்களின் தலைவரான தமிழீழத் தேசியத்


சந்திரிகா

தலைவர் வே. பிரபாகரனும் இணங்கி, இருவரும் கையொப்பம் இட்டுப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்தப் பிரகடனத்தின் பிரகாரம் போர் இடைநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு வடக்கு – கிழக்கில் உள்ள மாவட்டங்களில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன. இந்தக் குழுக்களுக்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தலைவர்களாக இருப்பர். அரசாங்கத் தரப்பில் இருவரும், விடுதலைப் புலிகள் தரப்பில் இருவரும் ஒவ்வொரு கண்காணிப்புக் குழுவிலும் அங்கம் வகிப்பர். ஓய்வுபெற்ற நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் இரு தரப்பினரதும் உள்ளூர்ப் பிரதிநிதிகளாக இருப்பர்.

போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிக்கும் குழுக்களில் அங்கம் வகிப்பதற்கு நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகள் தமது பிரமுகர்களை அனுப்புவதற்கு இணக்கம் தெரிவித்து விட்டன. கனடாவும், தனது நாட்டுப் பிரமுகர்களை அனுப்புவதற்கு விருப்பம் தெரிவிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

### இரண்டு வாரங்களுக்கு

ஆரம்பத்தில் போர் இடை நிறுத்தம் (மோதல் தவிர்ப்பு)


பண்டா

இரண்டுவாரகாலத்துக்கு அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்றும், பின்னர் நீடிக்கப்பட்டு, நிரந்தர போர் நிறுத்தமாக மாறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

போர் இடைநிறுத்தத்தை ரத்துச் செய்வதானால் இரு தரப்பினர்களில் ஒரு பகுதியினர் மூன்று நாள்களுக்கு (72 மணித்தியாலங்களுக்கு) முதலில் முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்று இணங்கப்பட்டுள்ளது.

போர் இடைநிறுத்தத்தின் வெற்றி, அது முழுமையான நிரந்தரமான போர் நிறுத்தமாக மாறக் கூடியதான வாய்ப்பு, மோதல் தவிர்ப்பு எந்தளவுக்கு மீறப்படாதிருக்கிறது என்பதிலேயே முற்றிலும் தங்கியுள்ளது.

ஈழப்போர் — இரண்டு தொடங்கிய பின்னர் இப்போதுதான் முதல் தடவையாக, போர் ஓய்வு ஒன்று உருவாகியுள்ளது. கடந்த காலங்களில் போர் நிறுத்த இணக்கங்களை ஸ்ரீலங்கா அரசாங்கப் படையினர் மீறியதால் நிலைமைகள் குழப்பம் அடைந்ததையும், பேச்சுக்கள் முறிந்து போனதையும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நினைவுபடுத்தி இருக்கிறார்.

முன்னர் போர் ஓய்வுகள் ஏற்படுத்தப்பட்டபோது அவற்றுக்கான இணக்கங்கள் அல்லது உடன்பாடுகள் அதிகாரிகள் மட்டத்திலேயே கைச்சாத்திடப்பட்டன. ஆனால் இம்முறை விடுதலைப்புலிகள் தரப்பில் அதியுயர் தலைவர் பிரபாகரனும், அரசாங்கப் படைகளின் சார்பில் முப்படைகளினதும் தளகர்த்தரான ஜனாதிபதி சந்திரிகாவும் ஒப்பமிட்டு போர் இடை நிறுத்தப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.

## இராணுவம் ஜனாதிபதிக்கு பின்னாலா? நிரூபிக்க இதுவே நல்ல சந்தர்ப்பம்

### சிறப்பான அந்தஸ்து உண்டு

தமிழ் மக்களின் தலைவரும் சிங்கள மக்களின் தலைவரும் இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளதால், இதனை வெறும் இராணுவ ஆவணமாகக் கொள்ளமுடியாது. அரசியல் முக்கியத்துவமும் சிறப்பும் உள்ள ஒருமதிப்புள்ள ஒப்பந்தமாகவும் இதனைக் கருத வேண்டும்.

எனவே ஸ்ரீலங்கா படையினர் முன்னரைப் போல, போர் இடைநிறுத்தப் பிரகடனத்தின் ஒழுங்கு விதிகளை மீறுவது மக்கள் தலைவர்களின் இணக்கத்தை — விருப்பத்தை— மீறுவதாகும்.

மேலும், போர் இடை நிறுத்தத்தை இம்முறை சர்வதேச பிரமுகர்கள் கண்காணிக்கப்போகிறார்கள். அதன் நிமித்தமும் தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் ஒப்பமிட்டு வெளியிட்ட பிரகடனத்துக்கு அதிக வலுவும், சிறப்பான அந்தஸ்தும் உண்டு என்பதனை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மறந்து விடக்கூடாது.

கண்காணிப்புக் குழுக்களில் சர்வதேசப் பிரமுகர்கள் இடம் பெறுவதால், வடக்கு-கிழக்கு விவகாரமும், இங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த போரும் சர்வதேசமயப்படுத்தப்பட்டு விட்டன என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவற்றை எல்லாம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் உள்வாங்கி, போர் இடை நிறுத்தத்தைச் சரிவரக் கைக்கொண்டு, அதற்கான ஒழுங்கு விதிகளை மீறாமல் அமைதியை நிலைநாட்டினால் மட்டுமே இப்போதைய ஆரம்பம் போர் நிறுத்தம் என்ற முன்னேற்ற நிலைக்கு படி ஏறி எட்டமுடியும்.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் போர் இடைநிறுத்தம் அவதானிக்கப்பட உள்ளதால், விதிகளை மீறிவிட்டு, அடுத்த தரப்பார் மீது குற்றஞ் சுமத்துவதும், தவறை மூடி மறைக்கப் பார்ப்பதும் வெகு கடினமாக இருக்கும் என்பதனை இராணுவத்தினர் உணர்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

### மீறல்கள் ஆகாது

தலைவர் பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் செய்து கொண்ட போர் இடைநிறுத்தப் பிரகடனம் மிகவும் இறுக்கமானதாக உள்ளது. மோதல் தவிர்ப்புக்கான அம்சங்களை வெகு தெளிவாக ஓட்டை ஒடிசல் இன்றி வரையறை செய்துள்ளது. இலேசான மீறலையும் கண்டுபிடிக்கக் கூடியதாக அது அமைந்துள்ளது.

எனவே இம்முறை போர் இடை நிறுத்தத்தை இராணுவம் மீறினால் அதற்கான பொறுப்பில் இருந்து அது தப்பிக்கொள்வது கடினமாகவே இருக்கும்.

எப்படியோ, போர் இடை நிறுத்தம் இம்முறை ஒழுங்காக கடைப்பிடிக்கப்பட

### அரசியல்

வேண்டிய தேவை மிகவும் அதிகமாகவே உள்ளது. போர் நிறுத்தம் உருவாகுவதும், அந்தச் சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை தொடர்வதும், நியாயமான, நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதும், போர் இடை நிறுத்தத்தின் வெற்றியிலேயே தங்கியுள்ளது.

இதனை இரண்டு தரப்பினருமே கருத்தில் கொண்டு செயற்பட்டால் எல்லாம் நல்ல வண்ணம் ஆகும்.

போர் இடைநிறுத்தம் செல்வனே செயலாகி, போர் நிறுத்தம் ஒன்றினை எட்டும் என்று அரசியல் அவதானிகள் வெகுவாக நம்புகிறார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் தான் பொருளாதாரத்தை விருத்தி செய்து நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதனை ஜனாதிபதி சந்திரிகா மனதார உணர்ந்திருக்கிறார். அந்த இலக்கை நோக்கிச் செயற்படுவதற்கும் அவர் தீர்மானித்துள்ளார். அதற்கான மக்கள் ஆதரவு அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளது—

அதாவது போரை முடிவுக்குக் கொண்டு வந்து, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, அதிலிருந்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வது என்ற சந்திரிகாவின் செயலாக்கத்துக்கு மக்கள் ஆதரவு உண்டு; மக்கள் அவருக்குப் பின்னால் நிற்கிறார்கள்—

மக்களை மட்டுமன்றி இராணுவத்தினரையும் இது விடயத்தில் சந்திரிகா தமக்குப் பின்னால் கொண்டு வந்து விட்டார்—என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

### இராணுவத்திடம் மனமாற்றமா?

போரைத் தொடர வேண்டும், விடுதலைப் புலிகளை ஒழிக்க வேண்டும், விடுதலைப் புலிகளைப் புறம்பாகவும், தமிழ் மக்களைப் புறம்பாகவும், பார்க்கும் அணுகுமுறையை கடைப்பிடிப்பது என்ற பழைய 'சித்தாந்தங்களை' எல்லாம் இராணுவ உயர் அதிகாரிகள் மூளை கட்டி வைக்கும் அளவுக்கு ஜனாதிபதி சந்திரிகா அவர்களை மாற்றித் தமது வழிக்குத் திருப்பிவிட்டார்— என்றும் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

அவர்களின் அந்த மதிப்பீடு எந்தளவுக்குச் சரியானது என்பதனை இரு வார காலப் போர் இடைநிறுத்தத்தின் போது இராணுவத் தரப்பினர் நடந்து கொள்ளும் விதம் எடுத்துக் காட்டும்!

அப்படி ஒரு மாற்றம் இராணுவத் தரப்பில் உண்டாகி இருந்தால், சந்திரிகாவின் ஆரம்பம் மிக வெற்றிகரமான முடிவாக மாறும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். இரண்டு வாரங்கள் பொறுத்திருந்து பார்க்கலாமே!

★ ★ ★

போர் இடைநிறுத்தம் போர் நிறுத்தமாக வேண்டும். தங்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர வேண்டும். தாம் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும் வாழும் நிலை உருவாக வேண்டும். தமது அரசியல் அபிலாசைகள் நிறைவேறக் கூடிய நிரந்தர அரசியல் தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும். இதுவே ஈழத்தமிழ் மக்களின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாட்டுக்கு இணக்கமான பாதையில் ஜனாதிபதி சந்திரிகா செல்வாரா என்பதே தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியும் ஆகும்.

தமிழர்களின் விருப்பத்துக்குச் சாதகமான பாதையில் அவர் நடப்பதற்கு ஆர்வமாக உள்ளார் என்பதனை, கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய அவரது கொள்கை விளக்க உரை பிரதிபலிக்கிறது.

தமது தந்தையாரின் அரசியல் படுகொலையால் தாக்க முற்றதாக அடிக்கடி கூறி வரும் சந்திரிகாவிடம், தந்தையாரின் சிந்தனைகளும், கோட்பாடுகளும் மனதில் ஆழ ஊன்றியிருப்பதை அவதானிக்க முடிகிறது. தந்தையார் மீது பெரும் அன்பும் அபிமானமும் அவருக்குண்டு என்பதாலேயே பண்டாரநாயக்காவின் பிறந்த தினமான இன்று (ஜனவரி 8) தொடக்கம் போர் இடை நிறுத்தம் கொண்டு வந்திருக்கிறார்.

### பண்டா-செல்வா ஒப்பந்தம்

இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தை, தமது தந்தையாரான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும், தந்தை செல்வநாயகமும் செய்து கொண்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்வைக்கப் போவதாக அவர் அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1959 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஓரளவு பிரதேச சுயாட்சியை வழங்குவதாக அமைந்தது.

## இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசமைப்பு மாற்றம்

வடக்கிலும் கிழக்கிலும் பிரதேச சபைகளை நிறுவவும், இரு சபைகளும் விரும்பின் இணைந்து செயற்படவும் அந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஜே. ஆர். போன்ற சிங்களப் பேரினவாதிகள் உருவாக்கி விட்ட எதிர்ப்பு அலையால், பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் பின்வாங்கிக்கொண்டார்.

முப்பத்தைந்துவருடங்களின் பின்னர் தமது தந்தையாரின் அந்தத் திட்டத்தை அரசாங்கத்தின் தீர்வுக்குரிய அடிப்படையாக வைத்துக் கொள்ள முன்வந்தது சந்திரிகாவின் அரசியல் துணிச்சலை எடுத்துக் காட்டுவதாகக் கருத இடமுண்டு.

சிங்கள மக்கள் கடந்த இரண்டு தேர்தல்களிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுமாறு அடுத்தடுத்துக் கொடுத்த ஆணை சந்திரிகாவுக்கு இந்தத் துணிச்சலைத் தந்திருக்கிறது என்றும் நம்பலாம்.

தமிழர்களைப் பொறுத்தவரையில், பண்டா – செல்வா ஒப்பந்தம் முழுமையான தீர்வாக முடியாது என்பதனை சந்திரிகா உணர்ந்திருக்கிறார். அதனாலேயே அதனை அத்திவாரமாக வைத்து காலத்துக்குப் பொருத்தமான தீர்வை உருவாக்க விரும்புகிறார் என்று எடுத்துக் கொள்ளலாம்.

### ஆரோக்கியமான செயற்பாடு

இனப்பிரச்சினைக்கு அரசாங்கமே தனது சொந்தத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்து, அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பதும் ஓர் ஆரோக்கியமான செயற்பாடு.

அண்மைக் காலங்களில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விரும்பாத, அல்லது இழுத்தடிக்க விரும்பிய சிங்களத் தலைவர்கள், அரசியல் கட்சிகள் மாநாடு, சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு என்று கூடிக் குழம்பியதுடன், ஒப்பிடும்போது சந்திரிகாவின் அணுகுமுறை முற்றிலும் வித்தியாசமானதாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காண வேண்டும் என்பதில் சந்திரிகாவுக்கு உள்ள மனப்பூர்வமான விருப்பத்தையும் இது எடுத்துக் காட்டுகிறது எனலாம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கு உதவும் விதத்தில் அரசமைப்புச் சட்டத்தை மாற்றவும் தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வெள்ளிக் கிழமை இரவு நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினையை நியாய


பிரபா

மாகத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதிக்கு உள்ள அக்கறையை எடுத்துக்காட்டும் ஆக்கபூர்வமான சமிக்ஞை இது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் பூரண தன்னாட்சி உரிமை கொண்ட தீர்வு ஒன்றையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். சிங்கள மக்கள் தமது உரிமைகளைப் பேணி, தம்மைத் தாமே ஆள்வது போல, தங்களைத் தாங்களே ஆள வேண்டும் என்பதே தமிழர்களின் அரசியல் அபிலாசை.

தமது கௌரவத்தையும், சுதந்திரத்தையும், பாதுகாப்பையும், தமது சொந்த மண்ணின் பொருண்மிய அபிவிருத்தியையும், சமூக முன்னேற்றத்தையும் உறுதி செய்யும் தீர்வு ஒன்றையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். வடக்கும் கிழக்கும் இணைந்த நிலையில் பூரண தன்னாட்சி உரிமை அதிகாரங்களுடன் கூடிய தனியான ஆட்சி அவர்களுக்கு வேண்டும். அதுவே நிரந்தரத் தீர்வாகவும் அமைய முடியும்.

சிங்கள அரசுகளின் கீழான, ஐந்து தசாப்த கால ஒடுக்கப்பட்ட வாழ்க்கையின் பின்னரும், இத்தனை அழிவுகள் இழப்புகளின் பின்னரும், அரை குறைத் தீர்வு எதனையும் தமிழர்கள் ஏற்கப் போவதில்லை. இதனை


செல்வா

ஜனாதிபதி சந்திரிகா உணர்ந்து கொள்வது அவசியம்.

வடக்கைப் பொறுத்தவரையில் தன்னாட்சிக்கான அத்திவாரம் இடப்பட்டிருக்கிறது. காவல்துறை, நீதி நிர்வாகம், நிர்வாகத்துறை, பொருண்மியக்கட்டமைப்பு ஆகிய அலகுகள் திறம்பட இயங்கி வருகின்றன. இவற்றை ஏற்றுக்

*உதயகாந்தன்*

கொண்டு, உள்ளடக்கிக் கொண்டு தன்னாட்சி உருவாக்கப்படாவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

### அதுவல்ல இது!

அரசின் பொருண்மியக் கொள்கையையும் ஜனாதிபதி சந்திரிகா தமது நாடாளுமன்ற (கொள்கைப் பிரகடன) உரையில் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையை தொடர்வது, அபிவிருத்திக்குத் தனியார் துறையையே இயந்திரமாகக் கொண்டு அதற்கு ஊக்கமளிப்பது ஆகிய அவரது அணுகுமுறைகள் உள் நாட்டு, வெளிநாட்டு வர்த்தக, கைத்தொழில் வட்டாரங்களில் பெரும் நம்பிக்கையை உருவாக்கி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அதன் பிரதிபலனாக நாட்டின் பொருண்மிய நிலை மேம்பாடு அடையும் என்ற கருத்தும் உருவாகியுள்ளது.

ஆனால் ஒன்று...

பண்டா — செல்வா ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகாரப் பரவல் செய்யும் தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வருவதாக கூறிவிட்டதால், —

பொருண்மிய வட்டாரங்களில் நம்பிக்கையை உருவாக்கியது போன்று, தமிழ் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை இலகுவில் தோற்றுவித்து விட முடியாது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் வெறும் சொல் அன்றிச் செயலே பிரதானம். தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் தீர்வு ஒன்றைக் காண முனையும் போது சிங்களவர்களின் எதிர்ப்பை சம்பாதிக்காமல் இருப்பது முக்கியம். அதனை தடுப்பதற்கு, அல்லது சிங்கள மக்களை தனக்குப் பின்னால் இப்போதுஉள்ளதுபோல நிரந்தரமாக வைத்திருப்பதற்குச் சந்திரிகா தவறினால் அவரது தந்தையார் காலத்து சரித்திரம் மீளும் ஆபத்து உண்டு!

அத்தகைய ஒரு நிலைமை ஏற்படாமல், அனுபவங்களைப் பாடங்களாக்கி விவேகமாகவும், துணிச்சலாகவும், சாதுரியமாகவும், திட்டமிட்டும் செயற்பட்டால், சந்திரிகா சரித்திரத்தில் இடம் பெறலாம். எல்லாம் அவரது செயற்பாட்டிலேயே தங்கி உள்ளது.

★

## ஆலயங்களில்

சுழிபுரம் ஜன.8

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி நடேசர் ஆலயத்தில் இன்று விசேட ஹோமம் நடைபெற்று, திருவாசகம் முற்றும்ஓதுதல் இடம்பெறும். (உ-28)

## சூழலியல் சுற்றுலா!

யாழ்ப்பாணம் ஜன.8

யாழ். கல்வி வலயம் இரண்டில் ஜி.சி.ஈ உயர்தர வகுப்புகளில்தாவரவியல், விலங்கியல் கற்பிக்கும் ஆசிரியர்கள், மற்றும் விஞ்ஞான முதன்மை ஆசிரியர்கள் ஆகியோருக்கான சூழலியல் தொடர்பான வெளிக்களப் பயிற்சிக்கான சுற்றுலா இன்று ஆரம்பமாகவுள்ளது.

கோப்பாய் கணித — விஞ்ஞான மூலவள நிலையத்தில் இருந்து காலை 7.15 மணிக்கு சுற்றுலா ஆரம்பிக்கும்.

சுற்றுலாவில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தமக்குரிய உணவுடன் அங்கு வருமாறு உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

## முல்லையில் நிர்வாக சேவை பணிமனை

யாழ்ப்பாணம், ஜன. 8

தமிழீழ நிர்வாக சேவையின் முல்லை மாவட்டச் செயலகம் நேற்று முன்தினம் அங்கு திறந்து வைக்கப்பட்டது. இதில் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. டொமினிக் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## சைக்கிளையும் கைவிட்டு ஓடிய கோழித் திருடன்!

தென்மராட்சி, ஜன. 8

கோழிகள் அடைத்திருந்த கூட்டைத் தூக்கிக் கொண்டு சென்ற திருடனைக் கண்டு வீட்டுக்காரர் சத்தமிடவே கோழிக் கூட்டை எறிந்து விட்டு தலைதெறிக்க ஓடினான் திருடன்.

அந்தத் திருட்டுப் பேர்வழி தான் கொண்டு வந்த சைச்கிளையும் கைவிட்டு விட்டே தப்பி ஓடினான்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு எழுதுமட்டுவாழ் பாடசாலை வீதியில் இடம்பெற்றது.

திருடன் கைவிட்டுச் சென்ற சைக்கிள் எழுதுமட்டுவாழ் சிற்றூர்க் பொறுப்பாளர் நேசனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரவுப் பதிவு இயக்குநர்

## (DATA ENTRY OPERATOR)

கணனியியல் பயிற்சி பெற்ற தரவுப் பதிவு இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

d base Language அறிவுப் பயிற்சியும் அவசியம். ஆங்கில தட்டச்சு தெரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் நேரில் கையளிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்,**
**உதயன் வெளியீட்டகம்,**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## சி. தெய்வானைப்பிள்ளை

சித்தன்கேணியைச் சேர்ந்த தெய்வானைப் பிள்ளை காலமானார்.

இவர் காலஞ் சென்ற சிதம்பரேஸ்வரப்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசநாயகியின் அன்புத் தாயாரும், பூலோகசிங்கத்தின் (இளைப்பாறிய எழுதுவினைஞர் விவசாயத் திணைக்களம்) அன்பு மாமியாரும். சிவசிதம்பரம் (ஈழநாடு), சிவானந்தன் (ப. நோ. கூ. ச. சங்கானை), சிவபாலன் (விவசாயத் திணைக்களம் திருநெல்வேலி), சிவகுமாரன் (உப தபால் அதிபர் சித்தன்கேணி), Dr. சிவகாமசுந்தரி [கொழும்பு போதனா வைத்தியசாலை], சிவநேசன் [பொறியியலாளர் வீதிஅபிவிருத்திச்சபைத் திணைக்களம் திருகோணமலை], சாரதாதேவி, ரஜனி, சந்திரலேகா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஜயராகவன், ஞானரூபன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று [08 - 01 - 95] காலை 8மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
சி. பூலோகசிங்கம்
[மருமகன்]

மாதர் சங்க வீதி,
சித்தன்கேணி.
[34582]

## கணபதிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

இணுவில் மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சபாபதிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிறீமாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி ஞானேஸ்வரன் – சிவகாமிப்பிள்ளை, இலங்கைநாயகம், காலஞ்சென்ற திருமதி முத்துக்குமாரு மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நித்தியானந்தன், சர்வானந்தன் (பிரான்ஸ்), சண்முகானந்தன் (கனடா), சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும்,செல்வநாயகம் (அமெரிக்கா), செல்வராணி, ஸ்ரீதரன் (சுவிஸ்), யசோதரா, றசினா, சாந்தி, வெண்ணிலா ஆகியோரின் அன்பு மாமனாரும், விக்கினேஸ்வரன், நந்தினி, நளாயினி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இணுவில் மேற்கிலுள்ள அவரது ''அம்பலவாணர் இல்லத்''தில் இன்று 8 - 1 – 95 ஞாயிறு 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பூவோடை மயானத்துச்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச, நித்தியானந்தன்
(மகன்)

இணுவில் மேற்கு,
இணுவில்.
(34601)

## தம்பையா பாலசிங்கம்
## (குட்டித்தம்பி)

6 – 1 – 95 மாலை 5 மணிக்கு சிவபதமடைந்த ஏழாலை மேற்கு தம்பையா பாலசிங்கம் (குட்டித்தம்பி) அவர்களின் இறுதிக் கிரியைகள் இன்று (8 – 1 – 95) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்திஓடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி

(34602)

## வல்லிபுரம் இளையதம்பி

B. A. Hons (Lond.)
(Retired Eng. Trained Teacher)

48, சபாபதி வீதி தலையாளியை வதிவிடமாகக் கொண்டவரும் முன்னாள் உரும்பிராய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி உப அதிபராகக் கடமையாற்றியவருமான ஓய்வுபெற்ற வ. இளையதம்பி 30–12–94இல் லண்டனில் காலமானார்.

இவர் பராசக்தியின் (U K) அன்புக் கணவரும், Dr. சதீசன் (U K), Dr. குமரன் (U K), Dr. சுபத்திரா (U K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி சதீசன் (குணம்) (U K) Dr. கௌரி (U K), Dr. N இரத்தினராஜன் (U K) ஆகியோரின் அன்புமாமனாரும், திரு. நா. வாமதேவன் (U K), திருமதி முகிருபாம்பிகை (Canada), திரு. நா. ஸ்கந்தராஜா (Canada), காலஞ்சென்ற திருமதி க. சிவகாமசுந்தரி, திருமதி நா. பாலசரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும், சஞ்சீவன், சுஜீவன், ரஜீவன், நிருபன், நிமலன், கோகுலராஜ், ஜனகராஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி நா. பாலசரஸ்வதி
50, சபாபதி வீதி,
யாழ்ப்பாணம்.

Dr. N. Ratnarajan,
Holly Bank,
Mottingham Lane,
London SE9 4 RT,
U K.
(34596)

# செச்சேனிய படைகளின் தாக்குதலில் ரஷ்யப் படைத்தளபதி பலியானார்!

## குறொஸ்னியில் ஜனாதிபதி மாளிகை எரிகின்றது

லண்டன், ஜன. 8

ரஷ்யாவிலிருந்து பிரிந்து சென்ற செச்சேனியா குடியரசு மீது ரஷ்யப் படைகள் நடத்தி வரும் தொடர் தாக்குதலுக்கு தலைமை வகித்த ரஷ்ய உள்நாட்டு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் விக்டர் வரயயோவ் நேற்று சண்டையில் கொல்லப்பட்டார்

மூத்த படை அதிகாரிகளுடன் செச்சேனிய தலைநகர் குறொஸ்னியில் ரஷ்யப் படைகளை வழிநடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது, அருகில் விழுந்து வெடித்த மோட்டார் ஷெல்லுக்கு அவர் பலியானதாக அறிவிக்கப்படுகின்றது.

செச்சேனியா படைகள் மீது கடும் தாக்குதலை நடத்திவரும் ரஷ்ய படைகளுக்கு தளபதியின் மரணம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் குறிப்பிட்டனர்.

இதற்கிடையில் —

செச்சேனிய தலைநகர் குறொஸ்னி மீது குண்டுமாரி பொழிந்து வரும் ரஷ்யப் படைகள் தளபதியின் மரணத்தை அடுத்து தமது தாக்குதல்களை மேலும் தீவிரப் படுத்தியிருப்பதாகவும்—

தலைநகரம் குறொஸ்னியில் உள்ள செச்சேனிய ஜனாதிபதியின் அலுவலகம் உட்பட பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிவதாகவும் பிந்திய செய்திகள் தெரிவித்தன. (உ)

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பின் போது

# மூன்று இளம் தமிழ்ப் பெண்களை மானபங்கப் படுத்தினர் படையினர்!

கொழும்பு, ஜன. 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பூமாஞ்சோலை காயான்காடு ஆகிய கிராமங்களை புத்தாண்டு தினமன்று சுற்றிவளைத்த இராணுவத்தினர் மூன்று இளம் தமிழ்ப் பெண்களை மானபங்கப்படுத்தினர் எனப்புகார் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின் போது மேலும் சில பெண்கள் உடல் ரீதியாக இம்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும்—

பல ஆண்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு அரச அதிபர் பாதுகாப்பு இணைப்பதிகாரி, செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகிவற்றுக்கு தமிழ் எம். பி ஒருவரால் இது குறித்து புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மூன்று இளம் பெண்களும் தாம்மான பங்கப்படுத்தப்பட்டதாக அங்கு சென்ற செஞ்சிலுவைச் சங்க அதிகாரிக்கு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

''பாதுகாப்பு தேடி ஓடிய தாங்கள் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு இத்தகைய இம்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அந்தப் பெண்கள் தமது வாக்குமூலத்தில் கூறியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான விவசாயிகளான ஆண்கள் புதைக்கப்பட்டிருந்த சடலங்கள் சிலவற்றை தோண்டி எடுக்குமாறு பணிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம்முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்பட்டு உண்மையென கண்டுபிடிக்கப் பட்டால், சம்பந்தப்பட்ட படையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்பு இணைப்பதிகாரி உறுதி கூறியுள்ளார் (ஒ-3)

## பாராட்டு வைபவம்

யாழ்ப்பாணம், ஜன. 8

கடந்த ஆண்டு ஜி சீ ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்கான பாராட்டு விழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்படி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும், மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்ற செல்வன் பே. மதிதரன் மற்றும் செல்வன் க. சுதாகரன், செல்வன் அ அலஸ்ரீன் குமார் ஆகியோர் பாராட்டப் படவுள்ளனர். (ஐ-4)

## இன்று

யாழ்ப்பாணம், ஜன. 8

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றமும் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து நடத்தும் பிற்மன் வாரவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கலைமன்றத்தில் நடைபெறும். (க)

## தபால்களை சேர்க்குக

யாழ்ப்பாணம், ஜன. 8

''மாஹோ'' கப்பலில் இங்கிருந்து தபால் பொதிகள் எடுத்துச்செல்லப்படவுள்ளன. அதற்கு வசதியாக பொதுமக்கள் தபால்களை நாளை திங்கள் காலை 9 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு பிரதம தபால் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். (ஐ)

## கண்டி நகரில் காமினிக்கு சிலை!

கொழும்பு, ஜன. 8

காலஞ்சென்ற காமினி திஸாநாயக்காவின் சிலை ஒன்றை கண்டி நகரின் மத்தியில் அமைப்பதற்கு கண்டி மாநகரசபை தீர்மானித்துள்ளது (ஐ-6)

## திருட்டு நகைகள் மீட்பு

தென்மராட்சி, ஜன. 7

குசினிக்குள் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை வீட்டுக்குள் புகுந்த திருடன் 95 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபேஸ் செய்த சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றுள்ளது.

இத் திருட்டு தொடர்பாக சாவகச்சேரி காவல் துறையினர் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக்கைது செய்ததுடன் தங்க நகைகளையும் மீட்டெடுத்துள்ளனர் (ஒ-117)

## மாடுகளுக்கு தடுப்பூசி

சண்டிலிப்பாய், ஜன. 7

மாடுகளுக்கு முன் அடைப்பன் பின் அடைப்பன் நோய் வராது போடப்படும் தடுப்பு ஊசி மருந்து சண்டிலிப்பாயிலுள்ள சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இப்பிரிவிலுள்ள மாடு வளர்ப்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த தடுப்பு ஊசி மருந்தை மாடுகளுக்குப் போட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

## 4000க்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசியல் குழுக்கள் உட்பட அனேகமாக அனைத்துக் கட்சிகளுமே இந்த ஆயுதங்களைப் பெற்றிருந்தன.

இவற்றைவிட ஜெ.வி. பியின் அச்சுறுத்தல் இருந்த காலத்தில் கொலைப் பயமுத்தலுக்கு உள்ளானவர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் மட்டும் 2,000 துக்கு அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்படி ஆயுதம் பெற்றவர்களில் அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.க தலைவர்களின் நெருங்கிய சகாக்களும் அடங்கியுள்ளனர்.

இப்படியானவர்களிடம் கொடுக்கப்பட்ட ஆயுதங்களிலும் சில ஆயுதங்களே மீளப் பெறப்பட்டுள்ளன என்று பொலீசார் தெரிவிக்கின்றனர். (இ)

## கொள்கைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆட்சிக்கு வந்த அரசு பொதுமக்களின் நம்பிக்கையையும் கௌரவத்தையும் பேணிக் காப்பாற்றுவதற்காக சமர்ப்பித்திருந்த வாக்குறுதிகளுக்கு முரணாகச் செயற்படுவது கவலைக்குரியதாகும்.

''பஜிரோ'' கலாசாரத்தை ஒழிப்பதாக வாக்குறுதியளித்த அரசு இன்று அதற்கு முரணாகவே செயற்படுகின்றது என்பதை பொதுமக்கள் நன்கறிவர்; பொதுமக்கள் கவலையும் கோபமும் அடைந்துள்ளனர். — இவ்வாறு விக்ரர் ஐவன் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## வெளி நோயாளா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றறிக்கை ஒன்றில் —

நாட்டின் ஏனைய பெரியாஸ்பத்திரிகளைப் போல வெளிநோயாளர் சிகிச்சையை காலை ஏழு மணிக்கே ஆரம்பிக்க வேண்டும் என்றும்—

அதனை நடைமுறைப்படுத்துவதில் கஷ்டங்கள். சிரமங்கள் ஏதும் இருப்பின் அறிவிக்குமாறும்— கேட்கப்பட்டிருந்தது (ஐ-13-15)

## சமாதானக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற முறையிலும்—

செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவுக்கு இந்தத் திறமையும் நிபுணத்துவமும் கிடையாது. இருப்பினும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு சமாதானப் போக்குக்கு ஆதரவளிக்கவும்—

நடுநிலைமையானமத்தியஸ்தர் என்ற அதன் பாரம்பரிய பாத்திரத்தைத் தொடர்ந்து வகித்து சமாதானக் குழுக்களின் பணிக்குத் துணைபுரியவும்— விரும்புவதாக சம்பந்தப்பட்ட சகல தரப்புகளுக்கும் அறிவித்துள்ளது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-க)

## இனப்பிரச்சினைக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை —

''பண்டா — செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தாகி 35 வருடங்களாகிவிட்டன. அது காலம் கடந்த ஒப்பந்தம் அதை அப்படியே அமுல் செய்வது இப்போதைய காலத்துக்குப் பொருத்தமல்ல. அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு, தேவையான மாற்றங்களைச் செய்து, புதிய தீர்வு ஒன்றை எட்ட முயற்சிக்கலாம்''— இவ்வாறு பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு பேட்டியளித்த போது குறிப்பிட்டார். (உ-6)

## அரசு புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமாதான மார்க்கத்தில் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை ஆகும் என்று சர்வோதய இயக்கத்தின் தலைவர் திரு. ஏ.ரி.ஆரியரத்தினா கூறினார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டி. யு. குணசேகரா கருத்து வெளியிடுகையில்—

மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு உரிய வேளையில் அரசாங்கம் எடுத்துள்ள முக்கிய நடவடிக்கையாக போர் இடைநிறுத்தம் விளங்குகிறது என்றார்.

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அத்தாவுட செனவிரத்தினா கருத்துத் தெரிவிக்கையில்—

வடக்கு கிழக்கு யுத்தத்தின் காரணமாக தேசியத் தலைவர்கள் பலர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். இந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றார்.

'ஈரோஸ்' தலைவர் சங்கர் ராகி, சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன ஆகியோர் உட்பட பல அரசியல் தலைவர்களும் தேசிய மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பல வர்த்தக நிறுவன ஒன்றியங்களும் போர் இடை நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (உ-ஐ)

## ★உயிர்ப்பூ ★ செவ்வரத்தம்பூ

# 2 வீடியோ திரைப்படங்கள் புதனன்று வெளியீட்டுவிழா

## பாடல் கஸட்டுக்களும் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம் ஜன. 8

கடற்புலிகளின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய ''உயிர்ப்பூ'' வண்ண வீடியோ திரைப்படமும் —

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் கூட்டாக உருவாக்கிய''செவ்வரத்தம்பூ''வண்ண வீடியோ திரைப்படமும் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை வெளியிடப் படவுள்ளன.

அத்துடன் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையின் வெளியீடான, உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்கள் அடங்கிய தேனிசை செல்லப்பாவின் ''விடுதலைப் போர் முரசு'' என்னும் பாடல் ஒலிப் பதிவு நாடாவும்—

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக நோர்வே கிளையினர் உருவாக்கிய ''சுதந்திர தாகம்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவும் அன்றைய தினம் வெளியிடப் படும்.

வெளியீட்டு விழா வல்வெட்டித்துறை நெடியகாடு பிள்ளையார் கோவிலடியில் மாலை 4. 30 மணிக்கு நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளையவன் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

கலை பண்பாட்டுக்கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. ம. அன்பரசன், வரவேற்புரை நிகழ்த்துவார்.

வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவார்.

வீடியோ திரைப்பட நாடாக்களையும், பாடல் ஒலிப்பதிவு நாடாக்களையும் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை வெளியிடுவார். யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி அவற்றைப் பெற்றுக் கொள்வார்

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர். திரு. சு. ப தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

திருமதி. நாச்சியார் செல்வநாயகம், திருமதி. தர்மபூபதி சிதம்பரநாதன் ஆகியோர் மதிப்பீட்டுரை வழங்குவர்.

விழாவின் இறுதியில் இரு வீடியோ திரைப்படங்களும் திரையிடப்படும். (ஐ)

# கிளாலியில் காவியமான மாவீரருக்கு நினைவாலயம்

## பளையில் நாளை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

கடந்த காலங்களில் கிளாலி கடற்பகுதியில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாலயத் திறப்பு நிகழ்வும்—

கிளாலி கடலில் வைத்து ஸ்ரீலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் ஞாபகார்த்த நினைவுக்கல் திரை நீக்கமும் நாளை திங்கள் பிற்பகல் 4.30 மணிக்கு எழுதுமட்டுவாள் சந்தியில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச்செல்வன் இந்த நிகழ்வுகளுக்கு தலைமை வகிப்பார்.

மாவீரர்களின் நினைவாலயத்தை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை நாடாவை வெட்டி திறந்து வைப்பார்.

படுகொலையுண்ட பொதுமக்களின் ஞாபகார்த்த நினைவுக்கல்லை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் திரைநீக்கம் செய்வார்.

மாவீரர்களின் உருவப்படங்களை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி திரைநீக்கம் செய்து வைப்பார்.

நிகழ்வின் தொடக்கத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனும் ஈகைச்சுடர்களை ஏற்றுவர்.

தேசியக் கொடியை தென்மராட்சி சிறப்புப் பொறுப்பாளர் திரு. கானகன் ஏற்றுவார்

மாவீரர்களின் உருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர்கள் மலர்மாலை அணிவிப்பர்

நினைவுக் கூட்டமும் இடம் பெறும். (ஐ)

## சுகாதார பகுதியினர் துப்புரவு

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள மாடுகள் இறைச்சிக்காக வெட்டும் கொல்களங்கள் நேற்று யாழ். மாநகர சுகாதார பகுதியினரால் துப்புரவு செய்யப்பட்டது.

இறைச்சிக்காக வெட்டும் மாடுகளின் கழிவுகள் புதைக்கப்பட்டு மருந்தும் விசிறப் பட்டது. [ஒ-17]

# அஷ்ரப்புக்கு வாசஸ்தலம் இன்னும் வழங்கவில்லை

கப்பல் போகுவரத்து, துறைமுகம், புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சர் அஷ்ரப்புக்கு இதுவரை கொழும்பில் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது

பிரதி அமைச்சர்களுக்குக் கூட கொழும்பில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அமைச்சரவை அந்தஸ்துள்ளகாக தமக்கு வாசஸ்தலம் வழங்கப்படவில்லை என அஷ்ரப் கவலை தெரிவித்துள்ளதாக கொழும்பு சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (உ-10)

# மரண அறிவித்தல்

## திருமதி கமலராணி பரமநாதன்

[சுசிலா]

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி கமலராணி பரமநாதன் நேற்றுக் காலமானார். அன்னார் பாலர் கல்விக்கழக ஆசிரியையும், கோண்டாவில் மேற்கு விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும், பரமநாதனின் அன்பு மனைவியும், நிஜந்தன், சிந்துஜன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 8-1-95 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் தாவடி மயானத்தில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. பரமநாதன் [கணவர்]
ச. பரமேஸ்வரன் [சகோதரர் ந. ப. கூ. சங்கம்]
ஸ்ரீ. சிவானந்தராணி
(பாலர் கல்விக்கழக ஆசிரியை)

காளி கோயிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(34600)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் ... வீதி, ... இலுள்ள அச்சகத்தில் 08—01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org